
ஊர்ப்பாடசாலை
கே.வி.குணசேகரம்

# வாழவழி

அதிகாலை நேரம். மழை லேசாகத் தூறிக்கொண்டிருந்தது. அன்றிரவு முழுவதும் நித்திரை வராது தவித்துக் கொண்டிருந்தாள் கல்பனா. ஒரு வாரத்திற்கு முன்பு இராணுவத்தில் சேர்வதற்கான நேர்முகப் பரீட்சைக்குச் சென்றிருந்தாள். அன்று நியமனக்கடிதம் வந்திருந்தது. முன்பு சாவித்திரியின் கரைச்சலுக்காக விண்ணப்பித்திருந்தாள். அவளுக்கு இராணுவத்தில் சேரப் பிடிக்கவில்லை. சாவித்திரி தான் வற்புறுத்தி அழைத்துச் சென்றாள்.

நேர்முகப் பரீட்சைக்குக் கல்பனா செல்வது அவளது தாயாரான செல்லம்மாளுக்குப் பிடிக்கவில்லை. ஏற்கனவே இயக்கத்தில் சேர்ந்தமையால் பெருந்துன்பங்கள் ஏற்பட்டன. இனி இராணுவத்தில் சேர்ந்தால் என்னென்ன பிரச்சினைகள் வருமோ எனப் பயந்தாள். சாவித்திரியும் கல்பனாவுடன் இயக்கத்தில் இருந்து சரணடைந்து புனர்வாழ்வு பெற்றவள். இருவரும் ஓ.எல் சித்தியடைந்திருந்தனர். மேலே படிக்க வறுமை விடவில்லை.

சாவித்திரியும் கல்பனாவும் இனத்தவர்கள். தொண்ணூறாம் ஆண்டு பலாலியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள். இருவரது பெற்றோரும் கமக்காரர்கள். சொந்த ஊரிலேயே கமம் செய்து பெரும் சிரமத்தின்

மத்தியில் வாழ்ந்தவர்கள். இடம்பெயர்ந்த பின்பு அவர்களின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. இடம்பெயர்ந்த பின் இடம்பெயர்ந்திருந்த ஊரில் கூலிவேலைகளைச் செய்து சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

“எத்தனை நாட்களுக்குத் தான் கஷ்டப்படுவது? உனக்கு இரு தம்பிமார்களும் ஒரு தங்கச்சியும் உள்ளனர். எனக்கு இரண்டு தங்கைமார் உள்ளனர். நாம் தான் கஷ்டப்பட்டு விட்டோம். அவர்களும் கஷ்டப்பட வேண்டுமா..? எல்லோரும் இரக்கப்படுவார்கள். கூட்டம் வைத்துப் பேசுவார்கள். மகஜர் கொடுப்பார்கள். இவையெல்லாம் பத்திரிகைகளில் வரும். இவற்றைப் பேசவும் வாசிக்கவும் மகிழ்வாக இருக்கும் பலனேதும் வராது. பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவட்டங்கள் தோறும் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்களுக்கு உதவ யாருமில்லை. தொண்டு நிறுவனங்கள் அடிப்படையான உதவிகளைச் செய்வார்களே தவிர வாழ்வாதார உதவிகளைச் செய்யமாட்டார்கள். நாம் பெரிதாகப் படிக்கவில்லை. இயக்கத்தில் இருந்த போது இராணுவமாகத் தானே செயற்பட்டோம். அதனால் அரசாங்கத்தின் இராணுவத்தில் சேருவோம். கைநிறையச் சம்பளம் கிடைக்கும். வசதியோடு வாழலாம்” என்று சாவித்திரி கூறிய வார்த்தைகள் அவளின் காதில் ஒலித்தன. அவை நியாயமானதாகத் தென்பட்டதால் அவள் நேர்முகப் பரீட்சைக்குச் சாவித்திரியுடன் சென்றாள்.

‘‘பிள்ளை பிச்சையெடுத்தாலும் பரவாயில்லை. இராணுவத்தில் சேர வேண்டாம். அது பெரும் துன்பங்களை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும்’’ என்றாள் செல்லம்மாள்.

‘‘குலத்துக்கே உதவாத தொழில். ஆண்களே சேரமாட்டார்கள். நீ ஒரு பெண் எப்படிச் சேரலாம். அந்த எண்ணத்தை விட்டு விடு’’ என்றாள் அவளது தாய் மாமனான கந்தவனம்.

கந்தவனத்தை அவளுக்குப் பிடிப்பதில்லை. அவருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் இருக்கின்றனர். அவர்கள் ஐவரும் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். அவர் தமது வேலைகளைச் செய்விக்கவே தினமும் வீட்டுக்கு வருவார். அவர்களது வீட்டுவேலைகள் முழுவதையும் கல்பனாவின் தாயே செய்து வந்தாள்.

‘‘நான் போறதாகத் தீர்மானித்துவிட்டேன்’’ உறுதியாகச் சொன்னாள் கல்பனா.

அவர் அதை எதிர்பார்க்கவில்லை. அவள் அவரை மதிப்பதில்லை. அவரது இளைய மகனுக்கு அவளைக் கட்டி வைக்கச் செல்லம்மாள் முயன்றாள். வெளிப்படையாயும் கேட்டாள்.

‘‘இப்போதைய பிள்ளைகள் தாய் தந்தையரின் சொல்லை எங்கே கேட்கிறார்கள்? தாம் நினைத்தபடி தானே நடக்கிறார்கள். அவனுக்குச் சொந்தத்துக்கை செய்ய

விருப்பமில்லை என்கிறான். எப்படித் தெண்டிக்கிறது’’ என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்

‘‘வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட என்னால் முடியாது. ஏனென்றால் எமக்கு உதவுவதற்கு யாரும் இல்லை. ஆலோசனை வழங்கவும் உதவிகள் பெறவுமே பெரும்பாலானோர் இடம்பெயர்ந்தவர்களைப் பாவிக்கிறார்கள். எனக்குக் கீழேயுள்ள மூன்று சகோதரர்களும் கற்கிறார்கள். தம்பி கெட்டிக்காரன். அவன் உரிய முறையில் படித்தால் ஒரு டொக்ரர் ஆவானென அவனது ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அதனால் அவனைப் படிப்பிக்க வேண்டும். அப்பாவுக்குப் பெரிதாக உழைப்பில்லை. அம்மா வீடுகளில் எத்தனை நாளைக்குக் கூலிவேலை செய்வது. அதனால் நான் இராணுவத்தில் சேர்ந்தால் குடும்பம் நல்ல நிலைக்கு வரும். அரசாங்கத் தொழில் என்றால் எல்லாம் சரிசமமானவை. ஆசிரியரும் தொழில் தான் இராணுவத்தினரும் தொழில் தான்’’ என்றாள்.

கந்தவனம் எதுவும் பேசவில்லை. பேசினால் அவள் மதிக்கமாட்டாளென்று அவருக்குத் தெரியும். இருந்தபோதும் ஊரவர்கள் தன்னைக் குறைவாக மதிப்பார்கள் என்று நினைத்துச் சொன்னார்; ‘‘எங்கடை கலை, கலாசாரத்திற்கு அது ஏற்ற தொழிலில்லை. அதிலும் பெண்கள் சேர்வது குடும்பத்திற்கு இழுக்கைத் தரும்.’’

‘‘எமது கலை, கலாசாரத்தை இப்போ யார் பேணுகிறார்கள்..? உங்கள் மகளும் மருமகள்மாரும்

பேரப்பிள்ளைகளும் நமது நாட்டின் பண்பாட்டிற்கு ஏற்றவாறா தாம் வாழும் நாட்டிலிருந்து இந்த நாட்டுக்கு வருகிறார்கள். உங்களது பேரப்பிள்ளைகள் தமிழ் பேசுவார்களா..? காசும் பொருளும் பதவியும் அந்தஸ்தும் தான் இப்போ மேலோங்கியுள்ளது. பணமில்லாதவன் பிணம். பணத்தை நல்ல வழியில் தேட வேண்டுமென்று தான் பெரியவர்கள் கூறியுள்ளார்கள். அப்படித் தான் நானும் தேடப் போகிறேன்'' என்றாள் கல்பனா.

அவள் அப்படிச் சொன்ன பிறகும் கந்தவனம் சிறிது நேரம் நின்றார். சனசமூக நிலையத்தில் இரவு நடந்த கூட்டத்தில் சாவித்திரியும் கல்பனாவும் இராணுவத்தில் சேர்வது பற்றிக் காரசாரமான விவாதம் நடைபெற்றது. ஒரு சாரார் அவர்கள் சேர்வது சரியென்றும் இன்னொருசாரார் அது வரலாற்றுத் தவறென்றும் கூறிப் பிரச்சினைப்பட்டனர். அதன் தலைவர் துரைசிங்கம் எழுந்து; ''நான் நாளைக் காலையில் இருவரையும் சந்தித்துக் கதைக்கிறேன். இப்போ வீணாகப் பிரச்சினைப்பட வேண்டாம்'' என்று சற்றுக் கோபமாகக் கூறிய பின்பு தான் சபை அடங்கியது. அப்போது துரைசிங்கம் கந்தவனத்தையும் இருவரின் வீடுகளுக்கும் தன்னுடன் வரும்படி கேட்டுக்கொண்டார்; ''இருவரும் ஒன்றாகப் போவது சரியில்லை. நீ எட்டு மணிக்குப் போ. நான் பத்து நிமிடங்கள் கழித்து வந்து விடுகிறேன்'' என்று கூறிய துரைசிங்கத்தை எட்டரையாகியும் காணாததால் கந்தவனம் அமைதியை இழந்துவிட்டார்;

“தேவையில்லாமல் இவர் ஏன் நிற்கிறார்?” என்றும் கல்பனா நினைப்பாள் என்ற அச்சம் மனதில் எழுந்தது.

அப்போது துரைசிங்கம் அங்கு வந்தார். துரைசிங்கம் ஒரு பெரும் சமூகசேவகன். பல நிறுவனங்களில் பொறுப்பான பதவி வகிப்பவர். ஊரில் எது நடைபெற்றாலும் அது அவரின் அனுசரனையுடன் தான் நடைபெறும். ஊரவர்கள் அவரது பேச்சைத் தட்டமாட்டார்கள்.

துரைசிங்கத்தைக் கண்ட செல்லம்மாள் படலையடிக்கு ஓடோடி வந்தாள். அவள் பணக்கஷ்டம் ஏற்பட்டால் அவரிடம் தான் கேட்டுப் பெறுவாள். பின்பு தவணை முடிந்து பல நாட்களின் பின் தான் திருப்பிக் கொடுப்பாள். எனினும் அவர் அதைப் பற்றிக் கதைப்பதில்லை; “வாருங்கோ, வாருங்கோ” என்று முகமலர்வுடன் வரவேற்ற போதும் மனம் ‘திக்திக்’ என்று அடித்துக் கொண்டிருந்தது; “கல்பனா யாரையும் மதிக்கமாட்டாள். தான் இயக்கத்தில் இருந்த போது எல்லோருடைய நடத்தைகளையும் ஆராய்ந்ததாகச் சொல்வாள். துரைசிங்கத்திடம் தான் அவசரத்திற்குக் கடன்படுவது. அவரைப் பற்றியும் அவளுக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. இன்று என்ன சொல்வாளோ” என அஞ்சினாள்.

வெளியே நின்ற கல்பனா துரைசிங்கத்தைக் கண்டு விட்டு உள்ளே சென்றுவிட்டாள்; “நான் கல்பனாவுடன் தான்

கதைக்க வந்தேன். அவளைக் கூப்பிடு'' என்றார் துரைசிங்கம்.

பலத்த யோசனையுடன் செல்லம்மாள் உள்ளே சென்ற சில நிமிடங்களில் கல்பனா வெளியே வந்து துரைசிங்கத்திற்கு எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

''பிள்ளை நான் நேரடியாக விஷயத்திற்கு வருகிறேன். ஊரில் உள்ள எவருக்கும் நீ இராணுவத்தில் சேர்வது பிடிக்கவில்லை. அதனால் நீ போகாதை...'' என்று துரைசிங்கம் பேசும் போது குறுக்கிட்டாள் கல்பனா; ''ஐயா, நீங்கள் ஊருக்கப் பெரியவர். பல நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளில் இருந்து எமது மக்கள் படும் வேதனைகளைப் பற்றிப் பேசுபவர்; அறிக்கை விடுபவர். இவை மூலம் நீங்கள் இதுவரை சாதித்தது என்ன? எம்மிற் பலர் இயக்கத்தின் மீதிருந்த அதீத பற்றால் இயக்கத்தில் இணைந்தோம். அப்போது எம்மைப் பாராட்டி உற்சாகப்படுத்தி எமது தேவைகளைப் பூர்த்தி செய்த உங்களால் இப்போது ஏன் அப்படி நடக்க முடியவில்லை? உங்களுக்கு ஐந்து பிள்ளைகள். அவர்களும் உங்கள் மனைவியும் வெளிநாட்டில் சுகபோகங்களுடன் வாழ்கின்றனர். நீங்கள் பரம்பரை பரம்பரையாகப் பெரும் பணக்காரர். அப்படி இருக்க நீங்கள் இதுவரை யாருக்காவது உதவி செய்திருக்கிறீர்களா? உங்களுக்குள்ள வசதிக்குக் கடைசி புனர்வாழ்வு பெற்ற ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்திருக்கலாம். இல்லாவிட்டால் தொழில் வசதியாவது

செய்து கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தீர்களானால் நீங்கள் சொல்வதைக் கேட்கத் தான் வேண்டும். ஊருக்கு உபதேசம் செய்து கொண்டு உங்கள் நலனுக்காகப் பொதுச்சேவை செய்கிறீர்கள். அதனால் பெரும் புகழ் இருக்கு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவர்; ‘‘தோன்றின்புகழோடு தோன்றுக அ∴து இலார் தோன்றலின் தோன்றாமை நன்று’’ என்று கூறியுள்ளார். செயல்களைச் செய்யும் போது புகழ்வரக் கூடியதாகச் செய்ய முடியாதாவர்கள், செயல்களைச் செய்யாது விடுவது நன்று என்பது தான் அர்த்தம். எங்கே நீங்கள் செய்த புகழ் தரக் கூடிய செயலொன்றைச் சொல்லுங்கள் பார்ப்போம்.’’ மூச்சுவிட்டாள் கல்பனா.

துரைசிங்கம் எதுவும் பேசாததால் அவளே பேசினாள்; ‘‘உங்கடை விருப்பப்படி நான் இராணுவத்தில் சேரவில்லை. எம்முடைய குடும்பம் நல்ல முறையில் வாழவழி செய்யுங்கள்’’

துரைசிங்கம் எதுவும் பேசத் தோன்றாது சிலையாகச் சில கணங்கள் இருந்தார். பின் எழுந்து நடந்தார். அவருக்குப் பின்னால் கந்தவனமும் சென்றார். செல்லம்மாள் திகைத்துப் போனாள்.

செல்லம்மாளுக்கு அவள் கூறியது பிடிக்கவில்லை. இருந்தும் அவள் பேசவில்லை. பேசினால் கல்பனா தன்னை மதிக்கமாட்டாளென்று அவளுக்குத் தெரியும். இருந்த போதும் சில பிரச்சினைகளைக் கூறாது விட முடியாது. அது

பின் கல்பனாவுக்குக் தெரிந்தால் பிரச்சினைகள் பலவும் வரும் என்பதால் சொன்னாள்.

‘‘நேற்று மணியண்ணை வந்தவர். நீ சாவித்திரியின் வீட்டை போட்டாய். பிறகு வாறதெண்டவர். அவரோடு பிரச்சினைப்படாதே’’ என்றாள் செல்லம்மாள்.

‘‘அவர் சாவித்திரியின் வீட்டுக்கு வந்த போது என்னையும் சந்தித்தவர்’’

‘‘நீ என்ன சொன்னீ’’

‘‘நான் எதுவும் சொல்லவில்லை. சாவித்திரி தான் பிரச்சினைப்பட்டவள். அவரின் மகள் டொக்ரராயிருக்கிறாள். அவள் செய்தது சிங்கள டொக்டரை. அது சரியென்றால் இதுவும் சரி தான்’’ என்றவள். அதன் பின் மணியத்தார் எதுவும் பேசவில்லை’’ என்றாள் கல்பனா.

‘‘சாவித்திரி பெரியவர்களை மதிப்பதில்லை. மணியண்ணை ஊரில் பெரிய மனிதன். ஊரவை அவரைத் தெய்வமாக மதிக்கினை’’ செல்லம்மாள் பேசும் போது கல்பனா குறுக்கிட்டுப் பேசினாள்; ‘‘பெரிய மனிதன் என்பதற்காக எல்லாருக்கும் அவற்ரை ஆலோசனை பொருந்தாது. மற்றவர்களின் பிரச்சினைகளைத் தெரியாது அல்லது தீர்க்காது அவர்களுக்கு ஆலோசனை கூறுவது எந்த வகையில் நியாயமானது? சாவித்திரியின் குடும்பநிலை

மிகவும் மோசமானது. வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படுவதை விடுத்து அதற்கு விடுதலை தேடுவது பிழையா..? அவரின் மகள் சிங்கள நாட்டில் சிங்களவர் ஒருவரைக் கட்டி அங்கு டொக்டராக வேலை செய்யலாமென்றால் நான் தமிழ்நாட்டில் இராணுவத்தில் வேலை செய்வது தவறானதாகுமா..? எல்லோரும் தங்கள் தங்கள் பிரச்சினையை முன்வைத்தே எல்லாவற்றையும் செய்கிறார்கள். அதனால் தான் பிரச்சினைகள் தீர்வதில்லை'' என்றாள் கல்பனா.

விடிந்ததும் சாவித்திரி பயண ஆயத்தத்துடன் கல்பனாவின் வீட்டுக்கு ஓட்டோவில் வந்தாள். கல்பனா தனது சகோதரர்களை அழைத்துச் சொன்னாள்; ''உங்களின் நல்வாழ்வுக்காகத் தான் நான் இராணுவத்தில் சேர்கிறேன். கவனமாகப் படியுங்கள். நீங்கள் நல்ல நிலைக்கு வந்தவுடன் எனது தொழிலை நான் விட்டு விடுவேன். தம்பி, நீயொரு டொக்ரர் ஆக வேண்டும். அது தான் எனது கனவு'' என்று கூறிவிட்டு ஓட்டோவில் ஏறினாள். செல்லம்மாளால் துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. விம்மி விம்மி அழுதாள்.

அதைக் கண்ட கல்பனாவுக்கும் அழுகை வந்துவிட்டது. ஓட்டோவால் இறங்கி அவளின் அருகே வந்தாள்.

''அம்மா, நான் எனது குடும்பநிலை கருதித் தான் செல்கிறேன். எமக்கு உதவி செய்ய யாரும் இல்லை. மாமா கூடத் தன் பிள்ளைகளுக்கு எமது குடும்பத்தில் இருந்து

பெண் எடுக்கவில்லை. எனது தங்கை அமிர்தினிக்கு அல்லது எனக்குத் திருமணம் பேசிப் பாருங்கள் கலை, கலாசாரம் பண்பாட்டை யார் பார்ப்பார்கள்..? இரக்கப்படுவோர் யார்? இடம்பெயர்ந்தவர்களென நினைப்பவர்கள் யார்? புத்திமதிகளும் ஆலோசனைகளையும் பிறருக்குக் கூறுவர்களே தவிரத் தாம் பின்பற்றமாட்டார்கள். மணியண்ணைக்கு இரு புதல்வர்கள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். ஒருவருக்கென்றாலும் இடம்பெயர்ந்த குடும்பத்தில் இருந்து ஒரு பெண்ணை எடுப்பாரா…? எடுக்கமாட்டார். இது தானம்மா உலகம். காலப்போக்கில் எல்லாம் சரியாகும். நீ கவலைப்படாதே'' என்று கூறிவிட்டு ஓட்டோவில் ஏறினாள் கல்பனா.

இரண்டு வருடங்கள் கழிந்தன. கல்பனாவின் தம்பி கஜமுகன் மருத்துவபீடத்திற்குத் தெரிவானான். அவளது தங்கைகள் இருவரும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்கள்.

கல்பனா வீட்டுக்கு வந்தால் கொண்டாட்டம் தான். செல்லம்மாள் ஆட்டிறைச்சி வாங்கச் செல்வாள். கந்தவனம் மகிழ்வுடன் வந்து கதைப்பார். மணியமும் வந்து கதைப்பார். ஆனால் பிரச்சினைகளைக் கேட்பதில்லை

‘‘தொழில் செய்யுமிடத்தில் எந்தப் பிரச்சினைகளும் இல்லை. எல்லோரும் சகோதரர்களைப் போல வாழ்கிறோம். நான் வேலைக்குச் செல்லாவிட்டால் எனது சகோதரர்களால் கற்க முடியுமா? அதற்கு எவ்வளவ செலவு தெரியுமா?''

என்று கேட்டாள் கல்பனா. செல்லம்மாள் மகிழ்வோடு சிரித்தாள். கந்தவனமும் மணியமும் எதுவும் சொல்லவில்லை.

“மணியண்ணை, இராணுவத்தினருக்கு வீடமைத்துக் கொடுக்கப் போகிறார்களாம். நான் கடன்பெற்று ஒருமாடி வீடுகட்ட வேண்டும்.” என்றாள் கல்பனா.

மணியம் சிரித்தார். பேசவில்லை.

# ஊர்ப்பாடசாலை

திருநெல்வேலிச் சந்தைக்குச் சென்று தான் கொண்டு வந்த வாழைக்குலைகள் ஐந்தை நூற்றியம்பது ரூபாவுக்கு விற்று விட்டுத் தன்னுடன் சந்தைக்குத் தேங்காய்கள் கொண்டு வந்த விற்ற ரவீந்திரனிடம் இருநூறு ரூபாவைக் கடனாகக் கேட்டான் வரதன்.

“நானென்ன குபேரனே? நானும் உன்னைப் போல இடம்பெயர்ந்தவன் தான். ஊரூராய்ச் சென்று தேங்காய்கள் வாங்கி வந்து சந்தையில் விற்று அன்றாடம் சீவியம் நடத்துறன். இதுக்கு முன்பும் இரண்டு தரம் நூறு நூறு ரூபாய் வாங்கினனீ. அதையே திருப்பித் தரவில்லை. பிறகும் இருநூறு ரூபா கேட்டால் நானென்ன செய்யிறது. வரேக்கை மனிசி இண்டைக்கு மட்டும் தான் மிளகாய்த்தூள் இருக்கு. சந்தையிலை மிளகாயும் மல்லியும் சரக்குச் சாமான்களும் வாங்கியாருங்கோ எண்டவள். உனக்கு இருநூறு ரூபா தந்திட்டால் நாளைக்குச் சாப்பாடில்லை” என்றான் ரவீந்திரன்.

“நான்கு பொம்பிளைப் பிள்ளைகளுக்கு ஒரு பெடியன். அவனைப் படிப்பித்து விட வேணும் என்று நினைக்கிறன். அவன் தரம் ஐந்து புலமைப்பரிசில்

பரீட்சையை இந்த வருடம் ஆவணி மாதம் எடுக்கிறான். அந்தப் பரீட்சைக்கான வினாவிடைப் புத்தகம் ஒன்று நேற்று பள்ளிக்கூடத்திற்கு வந்ததாம். ஆசிரியர் இவன் சரியான கெட்டிகாரனென்பதால் இவனுக்கொன்றைக் கொடுத்து விட்டுட்டார். அதுக்கு முந்நூற்றைம்பது ரூபா வேணும். இப்ப தந்தியெண்டால் நாலைந்து நாட்களிலை தந்திடுவன். வாறவரிசம் உன்ரை இரண்டாவது மகள் புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கிறாள். இவனுக்குச் சோதினை முடிய நான் அதை உனக்குத் தாறன். மிகவும் நல்ல புத்தகமாம். கொழும்பிலை அச்சடிச்சது. அதிபர் கப்பலிலை கொழும்புக்குப் போய் வரேக்கை கொண்டந்தவராம். நல்ல புத்தகமாம்'' என்றான் வரதன்.

''யாழ்ப்பாணத்தில் காகிதாதிகள் கொம்பியூட்டர்கள் குறைவாக இருப்பதால் புலமைப்பரிசில் பரீட்சை வினாவிடைப் புத்தகங்கள் அடிப்பது குறைவு. கொழும்பில் கல்வி அமைச்சின் பாடவிதான சபை இருப்பதால் சிலபஸ்சுக்கேற்ற மாதிரி அவர்கள் பாடவிதானச் சபையின் உதவியுடன் நல்ல தரமான புத்தகங்களை அச்சடித்து வெளியிடுகிறார்களாம். பாடவிதான சபையாலை மாதிரி வகுப்புக்கள் அங்கு நடத்தப்படுகின்றனவாம். இஞ்சை பாதை மூடினதாலை அந்த வகுப்புக்களுக்கு யாரும் போவதில்லை. அதனால் எமது பிள்ளைகள் கல்வியில் மிகவும் பின்தங்கியுள்ளனர்'' என்று எனது மச்சான் எனக்கு அடிக்கடி சொல்வார். அவர் ஆசிரியராகக் கடமை செய்கிறார். அதுவும் ஐந்தாம் வகுப்புக்குப் படிப்பிப்பது அவர் தான். நான் காசு

தாறன். பரீட்சை முடியப் புத்தகத்தைத் தா’’ என்றான் ரவீந்திரன்.

‘‘சரி தா’’ என்று கூறி மகிழ்வுடன் பணத்தைப் பெற்றுக் கொண்ட வரதன் வீட்டை நோக்கிப் பயணமானான். நேற்று அந்தப் புத்தகத்தைக் கண்டவுடன் தனது மகன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து விட்டதாகவே அவன் எண்ணினான்.

சந்தையில் இருந்து வீட்டுக்குச் செல்லாது நேரே பாடசாலைக்குச் சென்ற வரதன் அதிபரிடம் சொல்லிவிட்டு தனது மகனான சபேசனின் வகுப்பாசிரியரிடம் சென்று பணத்தைக் கொடுத்தான்.

‘‘சபேசன் சரியான கெட்டிக்காரன். கட்டாயம் பாஸ் பண்ணுவான். அவனைப் பட்டணத்தில் உள்ள பாடசாலைக்கு அனுப்பிப் படிப்பிச்சுப்போடு’’ என்றார் ஆசிரியர்.

‘‘சரி சேர்’’ என்று மகிழ்வுடன் கூறிய வரதன் கனவுகளுடன் வீட்டுக்குச் சென்றான்.

புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்து பெறுபேறுகள் வெளியாகின. அதில் சபேசன் நூற்றிஐம்பத்திமூன்று புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தான். வரதனுக்கு பெரு மகிழ்ச்சி உண்டானது. அவனோடு படித்த பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இனிப்பு வகைகள் வாங்கிக் கொடுத்தான்.

“அப்பா நான் பட்டணத்தில் படிக்கச் செல்ல வேண்டும். அதற்காக ஒரு புதுச் சைக்கிள் வாங்கித் தாருங்கோ” என்றான் சபேசன்.

“உனக்கில்லாத சைக்கிளே. கொஞ்ச நாளைக்குப் பள்ளிக்கூடம் பழகு மட்டும் பாஸ்கரன்ரை வானிலை போ. அடுத்த வருடம் வாங்கித் தாறன். பக்கத்து வீட்டுப்பிள்ளைகளெல்லாம் பாஸ்கரன்ரை வானிலை தானே போறவை. நான் பாஸ்கரனிட்டைச் சொல்லிப்போட்டன்.” என்றான் வரதன்.

சபேசன் ஒழுக்கமான கீழ்ப்படிவுள்ள பையன். அதனால் அவன் ஒப்புக் கொண்டான்.

பட்டணத்தில் உள்ள பாடசாலை, பரீட்சைப் பெறுபேற்றுடன் விண்ணப்பிக்கும்படி அறிவித்ததால் வரதன் பரீட்சைப்பெறுபேற்றை அதிபரிடம் உறுதிப்படுத்தி விண்ணப்பித்தான்.

மார்கழிமாதம் பட்டணப் பாடசாலையில் இருந்து கடிதம் ஒன்று வரதனுக்கு வந்தது. பாடசாலையின் பெயர் இருந்ததால் ஆவலுடன் கடிதத்தைப் பிரித்து வாசித்தான்; “அன்புடையீர், எமது பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் நூற்றிஐம்பத்தைந்து புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைச் சேர்ப்பதாக முடிவு செய்யப்பட்டதால் தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது” என்றிருந்தது.

வரதன் ஆடிப்போனான். வகுப்பாசிரியரிடம் ஓடோடிச் சென்றான். அவர் மிகுந்த மனவருத்தத்துடன் சொன்னார்; ‘‘அவர்கள் தாம் நினைத்ததைத் தான் செய்வார்கள்.. ஒப்புக்கு விண்ணப்பங்களைக் கோருவார்கள். அனுமதியும் கொடுப்பார்கள். பின் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களையும் பணம் பெற்றுக் கொண்டு சேர்ப்பார்கள். எமது அதிபரின் மகன் நூற்றிமுப்பத்தைந்து புள்ளிகளைப் பெற்றுள்ளான். இருந்து பார் ஒரு தவணை கழிய அவன் சேர்க்கப்படுவான். அந்தப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத பலர் சேர்க்கப்பட்டுள்ளனர். அதனால் தான் வருடாவருடம் பத்துப் பதினைந்து பேர் ஏ.எல் எடுத்த நான்கு பாடங்களிலும் சித்தியடையாது இருக்கின்றனர்.’’

‘‘உன்னட்டைப் பணம் இல்லை. செல்வாக்கு இல்லை. இடம்பெயர்ந்து வந்து ஆற்ரையோ காணியிலை குடிசையமைத்து இருக்கிறாய். ஊர்ப் பள்ளிக்கூடத்திலை சேர். படிக்கிற பிள்ளை எங்கேயும் படிக்கும். இப்ப பெற்றோர் பாடசாலைகளை நம்புவதில்லை. தனியார் கல்வி நிலையங்களையே நம்புகின்றனர். மாலை வேளைகளிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் ஊர்ப் பாடசாலைப் பிள்ளைகளும் பட்டணப் பாடசாலைப் பிள்ளைகளும் தனியார் கல்வி நிறுவனங்களில் தானே படிக்கினை. அதனால் பயப்படாமல் ஊர்ப்பாடசாலை ஒன்றில் சேர். அவன் படிப்பான்’’ என்றார் ஆசிரியர்.

ஆசிரியர் கூறியது போல அதிபரின் மகன் வைகாசிமாதம் பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலையில் சேர்ந்தான்.

அதை அறிந்த வரதன் மீண்டும் சபேசனின் ஆசிரியரிடம் சென்றான்.

"சேர் நீங்கள் கூறியது போல அதிபரின் மகன் பட்டணப் பாடசாலையில் சேர்ந்துவிட்டான். இது நியாயமா...?"

"எங்களுரிலை நியாயம் அநியாயம் என்று எதுவும் இல்லை. நியாயமாக நடக்க வேண்டியவர்கள் அநியாயங்களை நியாயமென்கின்றனர். இதை எங்கை சொல்லியும் பிரயோசனமில்லை. வேண்டுமானால் நீ கல்வித் திணைக்களத்திற்குப் புகாரிட்டுப் பார்" என்றார் ஆசிரியர்.

"கடவுளே, நீயிருந்தால் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்" என்று மனதுள்க் கூறிவிட்டு வீட்டுக்கு வந்தான். சபேசன் சாப்பிடாமல் படுத்திருந்தான். அதைக் கண்ட வரதனுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

"என்னிற் பார்க்க குறைந்த புள்ளி எடுத்த அதிபரின் மகன் நிர்மலன் பட்டணப் பாடசாலையில் சேர்ந்துவிட்டான்" என்று கூறிவிட்டு விக்கிவிக்கி அழுதான் சபேசன்.

“சபேசன் அழாதை. நீ அழுதால் என்ரை நெஞ்சு வெடித்துவிடும். நான் என்ன பாவம் செய்தேனோ தெரியாது. பிறந்த மண்ணை விட்டு உடுத்த உடுப்புடன் வந்தேன். காணி, பூமி, வீடு வளவு சொத்து எல்லாம் போய்விட்டது. இப்போ நீ தான் எனது சொத்து. நீ படித்துத் தான் எமது குடும்பத்தை முன்னேற்ற வேண்டும். படிப்பு என்பது கடவுளின் கொடை. அதிபரிடம் கார் இருக்கு. பங்களா இருக்கு. இலட்சக் கணக்கில் பணம் இருக்கு. ஆனால் என்னிடம் எதுவுமில்லை. ஆனால் உன்னை நான் படிப்பிப்பேன். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. நீ பயப்படாமல் படி” என்றான் வரதன்.

“நான் படிப்பன் அப்பா. என்னாலை முடிந்தவரை படிப்பன்.” என்றான் சபேசன்.

ஐந்து வருடங்கள் கழிந்தன. சபேசன் ஓ.எல் பரீட்சை எழுதினான். ஒன்பது பாடங்களுக்கும் ஏ வந்தது. அதிபரின் மகன் சித்தியடையவில்லை.

மேலும் மூன்று வருடங்கள் கழிந்தன. சபேசன் ஏ.எல்லில் விஞ்ஞான பாடங்கள் எடுத்து மூன்று ஏ பெற்று மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவானான்.

சபேசனது ஏ.எல் வகுப்புக்கான செலவைக் கிராமத்துப் பாடசாலையில் கற்று வெளிநாடுகளில் இருக்கும் பழைய மாணவர்கள் ஏற்றுக்கொண்டனர். அத்துடன்

மருத்துவப் பட்டப்படிப்பின் செலவையும் அவர்களே ஏற்றுக்கொணடனர்.

சபேசனும் வரதனும் சபேசனின் தரம் ஐந்துப் புலமைப்பரிசில் பரீட்சைக்குக் கற்பித்த ஆசிரியரிடம் ஆசிபெறச் சென்றனர். அவர் சொன்னார்; ‘‘வரதன், நீ சபேசனைப் பட்டணப் பாடசாலையில் சேர்த்திருந்தால் அவனது படிப்புக்கான செலவைப் பட்டணப் பாடசாலை ஏற்றிராது. கிராமப் பாடசாலையில் கற்றமையால் கிராமப் பாடசாலையினர் உனது குடும்பநிலை அறிந்து உதவினார்கள். இது முன்பு உனக்கு ஆத்திரத்தைத் தந்தாலும் இப்போது மனநிம்மதியையும் நிறைவையும் தருகிறதல்லவா.’’

‘‘ஒம் சேர். நீங்கள் சொல்வது அனைத்தும் உண்மை. பாடசாலை கற்பதில்லை. மாணவர் தான் கற்க வேண்டும்.’’ என்றான் வரதன்.

# தந்தை சொன்னசொல்

நாகராசா அன்று தனது சைக்கிள் திருத்தும் கடைக்கு வந்த போது காலை பத்து மணி. அவனது உதவியாளன் சிவம். அவன் விடியற்காலை ஐந்து மணிக்கு வந்து கடையைத் திறப்பான். நாகராசா எட்டு மணிக்கு வந்து சிவத்தை வீட்டுக்கு அனுப்புவான்.

சிவம் சந்தியில் உள்ள மரக்கறிக்கடையில் மரக்கறிகளை வாங்கிச் சென்று அவனது மனைவி கௌசல்யாவுக்கு ஒன்பது மணிக்கு முன்கொடுத்தால் தான் அவள் சமைத்து அருகில் உள்ள பிரதேசச் செயலக ஊழியர்கள் பத்துப் பேருக்கு மதிய உணவு கொடுப்பாள்.

விடியற்காலையில் சந்தைக்குப் பொருட்களைக் கொண்டு போபவர்கள், சந்தைக்குப் பொருள் வாங்கச் செல்பவர்கள். அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் கடைக்கு வருவார்கள். அவர்களது சைக்கிள் ரயர் காற்றுப் போனால் அதை ஒட்டிக் கொடுத்தல் வேண்டும். பெண்களுக்குக் காற்றடித்துக் கொடுக்க வேண்டும். அதனால்

எட்டுமணிக்கு முன்பு இருநூறு முந்நூறு ரூபா வருமானம் வரும்.

சிவம் எட்டுமணிக்குப் பின்பு கடையில் நிற்கமாட்டான். எட்டுமணிக்கு நாகராசா கடைக்கு வராவிட்டால் கடையைப் பூட்டி அருகில் உள்ள தையல்கடையில் திறப்பைக் கொடுத்துவிட்டு அவன் சென்று விடுவான். பின்பு பத்து மணிக்குப் பிறகு தான் வருவான்.

நாகராசா கடைக்கு வந்த போது நாலைந்து வாடிக்கையாளர்கள் நின்றனர்; ‘‘நேற்று இரவு மகன் கொண்டு சென்ற போது சைக்கில் ரயரும் ரியூப்பும் வெடித்துவிட்டது. பழைசு ஏதாவது இருந்தால் மாற்றித் தா’’ என்றான் பத்மநாதன். அவன் பாடசாலையில் பீயோனாக வேலை செய்கிறான். ஐந்து பிள்ளைகள். கஷ்டப்பட்டவன்; ‘‘பிள்ளைகளெல்லாம் நன்றாகப் படிப்பார்கள். அவர்கள் தலை நிமிரு மட்டும் கரைச்சல் தான்’’ என்றான் பத்மநாதன்.

சிவராசா வாத்தியார் பூநகரிப் பாடசாலைக்குச் சைக்கிலில் தானே போறவர். அவரின் ரயரில் இரண்டு வெட்டுக்காயங்கள் இருக்கென்று நேற்று மாத்தினவர். பத்து ரூபாவித்த ரயரும் ரியூப்பும் இப்ப ஆயிரம் ரூபா. யுத்தத்தாலை எல்லாப் பொருட்களும் விலையேறிவிட்டது’’ என்று சொல்லிக்கொண்டு ரயரையும் ரியூப்பையும் மாற்றிக் கொடுத்தான்.

‘‘எவ்வளவு தாறது?’’

“நூறுரூபா தா” என்றான் நாகராசா. பத்மநாதன் எதுவும் பேசாது எழுபது ரூபா கொடுத்துவிட்டுச் சொன்னான்; “மிச்சத்தைப் பிறகு தாறன்.”

நாகராசா சிரித்தான்; “இப்ப ஏன் சிரிக்கிறாய் நான் கட்டாயம் தருவன்” என்றான் பத்மநாதன்.

“உப்பிடி நூறு தரம் சொல்லிட்டுப் போட்டாய். சரி போ..” என்றான் நாகராசா.

பதினொன்றரை மணிக்குச் சிவம் வந்தான்; “உனக்கு மச்சான் சுந்தரத்தின் வேலை முடிய எட்டு மணிக்கு மேலையாகும். இண்டைக்குக் கடைக்கு எத்தனை மணிக்கு வந்தனீ..” சிவம் கேட்டான்.

“பத்தே காலாச்சு. காலமை முந்நூற்றைம்பது ரூபா சேர்த்தது. எட்டுமணிக்கு நீ வந்திருந்தால் இருநூறு ரூபாயாவது உழைத்திருக்கலாம். நீ மச்சான்ரை பாடு பயன்களைப் பார்த்திட்டுப் பத்து மணிக்கு வந்திருக்கிறாய். இதுக்கு உனக்குச் சுந்தரத்தின் வெளிநாட்டிலை இருக்கிற பிள்ளைகள் இலட்சக்கணக்கிலை அனுப்புவினை. பேசாமல் கடையை விட்டுவிட்டு அவரோட இரன்” என்றான் சிவம்.

நாகராசா பதில் சொல்லவில்லை. பதில் சொன்னால் பல கதைகளை அவன் சொல்வான். அது சில சமயம் சண்டையையும் உருவாக்கும் என்று நாகராசாவுக்குத் தெரியும். அதனால் அவன் பேசவில்லை.

“நான்கு பிள்ளைகள் வெளிநாட்டிலை. அவருக்குப் பென்சன் வரூது. ஊர் முழுக்கக் காணி. நாலு பிள்ளைகளுக்கும் பங்கிட்டு எழுதியதால் பிள்ளைகளுக்குள்ப் பிரச்சினை. நீ மச்சான் என்கிறாய். நான்கு வருடமாய்ப் படுத்த படுக்கையில் இருக்கிற மனிசனைப் பராமரிக்கிறாய். ஒரு பரப்புக்காணி உனக்கு எழுதித் தந்திருக்கலாம் தானே?” கோபமாகக் கேட்டான் சிவம்.

அதற்கும் நாகராசா பதில் கூறவில்லை. அப்போது நாகராசாவின் மனைவி பவளம் காலைச் சாப்பாடு கொண்டு வந்தாள். அதைக் கண்டதும் சிவம் சொன்னான்; “இண்டைக்கு ஐயா காலைச் சாப்பாடு சாப்பிடவில்லையோ? உவருக்கு நீ தான் அக்கா இடங் கொடுத்திருக்கிறாய். நேற்றுக் கிழவன் ஆசைப்படுதென்று ஆட்டு இறைச்சி வாங்கிக் கொண்டு போகேக்கையே நான் சொன்னனான்; “வயது போனவைக்கு ஆட்டிறைச்சி ஒத்துக்கொள்ளாது. விடிய அவரைக் கழுவ வேண்டும். மருந்தும் எடுக்கிற நிலை வரும் என்று சொன்னனான். அது சரியாய்ப் போச்சு”

“இரவு முழுக்கக் கிழவன் வயிற்று வலியென்று கத்தினது. இரவு உடையோடு மலங்கழித்து விட்டார். இரவு முழுக்க நித்திரையில்லை. பிள்ளைகளெல்லாம் வெளிநாடுகளிலை வசதியாக இருக்கு. கிழவனுக்குப் பணம் அனுப்புவதில்லை. பென்சன் வருதாம். பதினொராயிரம் ரூபா பென்சன் இவரைப் பராமரிக்கப் போதுமே? சொன்னாலும் விளங்குவதில்லை. பக்கத்திலை மாமன், மச்சான்மார்

இருக்கினை ஒருத்தரெண்டாலும் ஏணெண்டு கேட்பதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோபம். தங்கச்சியாற்ரை பிள்ளைகள் தம்மை இவரின் பிள்ளைகள் செய்யவில்லையென்ற கோபம். தம்பியாரின் பிள்ளைகள் இவர் தமது தகப்பனின் காணிகளை ஏமாற்றி வாங்கிவிட்டாரென்ற கோபம். பிள்ளைகளுக்குச் சொத்துப் பங்கீட்டிலை கோபம். இவருக்குத் தான் எந்தக் கோபமும் இல்லை. தர்மராசா'' என்றாள் பவளம்.

அதற்கும் நாகராசா பதில் கூறவில்லை. பவளம் அமைதியானவள். ஆனால் பிரச்சினையென்று வந்தால் பத்திரகாளியாகி விடுவாள்; ‘‘கிழவனைப் பார்க்கிறதாலை சொந்தக்காரர்களையும் பகைக்க வேண்டியிருக்கு. அவற்றை காசுகளை நாங்கள் சுருட்டுகிறமாம். இளையவனுக்கு இருபது பரப்பிலை இருக்கிற வீட்டையும் வளவையும் எழுதினவர். அதன் வருமானத்தை இளைய மகனின் மனைவியின் சகோதரங்கள் தான் எடுக்கிறார்கள். அந்த வீட்டிலை இடம்பெயர்ந்த ஒரு குடும்பம் இருக்கு. அவர்களுடன் நாங்கள் வேற்றுமையில்லாமல் பழகுறம். இப்போ இளைய மகன் வீட்டை விற்கப் போறாராம். அதற்கு வீட்டில் இருப்பவர்கள் விடுகிறார்களில்லை. தாம் அதை வாங்கப் போவதாகக் கூறுகிறார்கள். ஆனால் அதை இளைய மகனின் மனைவியின் தமையன் வாங்க விரும்புகிறார். அதனால் சரியான பிரச்சினை. நாங்கள் தானாம் இடம்பெயர்ந்தவர்களைத் தூண்டிவிடுகிறோம். இதனால் பெரும் கரைச்சல். ஆனால் இவர் அதைப் பற்றிச்

சிந்திப்பதேயில்லை. கிழவனும் நீயும் அவர்களுடன் சேர்ந்து நாடகமாடுகிறாய் என்று தடிப்பாகக் கதைக்குது. ஆனால் இவர் அவரைக் கழுவித் துடைத்துக் கொண்டு திரிகிறார்.'' கொதித்தாள் பவளம்.

வீட்டுப் பிரச்சினைக்குக் காரணம் மூத்த மகனின் பெண்சாதி. அவளின்ரை ஊரவை தானாம் அங்கே இருக்கினை. மூத்தமகனின் மனைவியின் சகோதரி இங்கே இருக்கிறாள். அவள் தான் வீட்டில் இருப்பவர்களை எழும்ப வேண்டாம் என்று சொல்லி அவர்களுக்கு உதவியும் செய்கிறாள். வீட்டில் இருப்பவர்களிடம் அன்றன்று சாப்பிடவே பணமில்லை'' என்றான் சிவம்.

''ஏழைகளிடம் பணமில்லை. நல்ல மனம் இருக்கு. பணக்காரரிடம் பணமிருக்கு. நல்ல மனமில்லை. பணஞ் சேரச் சேரப் பகை தான் வளருது. கிழவன் எனக்குத் தூரத்துச் சொந்தம். எனது தந்தையடன் கூடப் படித்தவர். நல்ல நண்பன். அதனால் அவரது பிள்ளைகள் வெளிநாட்டுக்குச் சென்ற பின் அவர் உதவியில்லாது கஷ்டப்பட்ட போது அவருக்கு உதவி செய்யும்படி சொன்னவர். அப்பாவின் வேண்டுகோளுக்காகத் தான் நான் அவருக்கு உதவி செய்கிறேன். மற்றும்படி பலனை எதிர்பார்க்கவில்லை. பலனை அவரோ பிள்ளைகளோ தரத் தேவையில்லை. கடவுள் தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. எனது மூத்தமகன் பொறியியல் பட்டப்படிப்புப் படிக்கிறான். மகள் இம் முறை ஏ.எல் எடுக்கிறாள். கட்டாயம் பல்கலைக்கழகம் செல்வாள். இளையவன் ஒ.எல்

எடுத்திருக்கிறான். நல்ல றிசல்ட் வருமென்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இதெல்லாம் எனது வாழ்க்கையில் வந்த அதிட்டம் என்று சொல்லுதல் வேண்டும். எனது மைத்துனன் ஆசிரியர். மனைவியும் ஆசிரியர். ஆனால் அவரது மகன் ஏ.எல்லில் ஒரு பாடங் கூடச் சித்தியடையவில்லை. எனது மகன் மூன்று ஏ எடுத்தவன். இதெல்லாம் நான் செய்த புண்ணியம்'' என்றான் நாகராசா.

பவளம் எதுவும் பேசவில்லை. அவள் ஆத்திரத்தால் பேசும் போது நாகராசா சொல்வார்; ''பவளம் ஊரில் உள்ளவர்களைப் பார். எத்தனை பணக்காரரிருக்கினை. எத்தனை படித்தவை இருக்கினை. அவையின்ரை பிள்ளைகளைப் பார். பெரும்பான்மையானவர்களின் பிள்ளைகள் கல்வியறிவில் குறைந்வர்களாக இருக்கின்றனர். பட்டணத்துப் பிரபல பாடசாலையின் அதிபர் எனது மகனின் அறிவைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசுவார். அது நானும் நீயும் செய்த புண்ணியம். மகளும் ஒரு டொக்டராவள் என்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதுக்கு மேல் என்ன வேண்டும். எதிர்காலத்தில் நாம் பெரும் செல்வந்தராவோம். பயப்படாதே''

இயற்கையாக ஆத்திரம் வரும்போது அவள் கொதித்தெழுவாள். அப்போத நாகராசா கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வரும். வந்தவுடன்; ''அவர் சொல்வது உண்மை. எமது பிள்ளைகளின் அறிவை விடக் குறைந்த பிள்ளைகள்

தான் இங்குள்ளனர். நாம் ஆத்திரப்பட்டுப் புண்ணிய பலனைக் குறைக்கக் கூடாது'' என்று நினைப்பாள்.

வாரம் ஒன்று கழிந்தது. நாகராசாவின் மைத்துனன் சுந்தரம் இறந்துவிட்டார். சுந்தரத்தின் இரண்டு மகன்மாரும் அவர்களது மனைவிமாரும் பிள்ளைகளும் மரணவீட்டிற்கு வந்தனர்.

மிகவும் கோலாகலமாக மரணவீடு நடைபெற்றது. சுந்தரத்தின் மகன்மாரின் நண்பர்களும் இனத்தவர்களும் வந்து சேர்ந்தனர். இரவு முழுவதும் சாராயம் பரிமாறப்பட்டது.

மறுநாள் பிரேதத்தை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. சுந்தரத்தின் இரண்டு மகன்மாரும் நாகராசாவிடம் வந்தனர். மூத்தவன் சொன்னான்; ''அண்ணை எங்களுக்கு லீவு இல்லை. இரண்டு கிழமைக்குள்ச் செல்ல வேண்டும். நாங்கள் கொள்ளி வைத்தால் முப்பத்தொன்று முடியத் தான் போக வேண்டும். அதுவரை நிற்க முடியாது. அதனால் நீங்களே கொள்ளி வையுங்கள். நீங்களில்லாவிட்டால் அப்பா பெருங் கஷ்டப்பட்டிருப்பர். ஐந்து வருடமாகப் பாயில் வைத்துப் பராமரித்த உங்களுக்குத் தான் எங்களை விட உரிமை அதிகம்'' என்றான்.

நாகராசா அதற்கு ஒப்புக் கொண்டான். மறுநாள் எட்டுச் செலவு செய்யப்பட்டது. இரண்டு கடாக்கள் வெட்டி எட்டுக் கொண்டாடப்பட்டது.

ஒருவாரம் கழிந்ததும் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் சென்றுவிட்டனர். சுந்தரம் இருந்த வீட்டை மூத்தமகனின் மனைவியின் சகோதரனிடம் ஒப்படைத்தனர். போகும்போது மூத்தமகன் நாகராசாவுக்குச் சொன்னான்; ‘‘அப்பாவை நல்ல முறையில் பராமரித்தீர்கள். அதற்கு நன்றி.’’

நாகராசா எதுவும் சொல்லவில்லை. அன்று நாகராசா விடியற்காலை ஐந்துமணிக்கே கடைக்கு வந்துவிட்டான்.

‘‘உனக்கென்ன வெளிநாட்டுக்காரர்கள் அள்ளித் தந்திட்டுப் போயிருப்பினை. அதனாலை கடையை விட்டுடுவாய் என்று நினைத்தன். நேரத்தோடை வந்திட்டாய். அப்ப எதுவும் தரவில்லையோ?’’ என்றான் சிவம்.

நாகராசாவுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது; ‘‘நான் யாரையும் நம்பிச் சீவிப்பதில்லை. அவை தரவேண்டும் என்று நினைத்து நான் சுந்தரத்தாரைப் பார்க்கேல்லை. அப்பாவின் வேண்டுதலுக்காகத் தான் பார்த்தனான். இதை முன்பும் உனக்குச் சொல்லியிருக்கிறன். நீ எனக்கு நக்கலடிக்கிறாய். இனி இப்பிடிக் கதைத்தால் உன்னைக் கலைத்துப் போடுவன்’’

''நான் கதைக்கிறது உன்ரை நன்மைக்காகத் தான். வெளிநாட்டிலை அவங்கள் நல்லாய் வாழுறாங்கள். பென்சன் காணுமென்று காசு அனுப்புறேல்லை. மேலதிகமாய் நீ செலவு செய்தாய். இப்ப வெளிநாட்டாலை வந்து இலட்சக்கணக்கிலை செலவு செய்தவங்கள். தகப்பனைப் பராமரித்த உனக்கு என்ன தந்தவங்கள். இது என்ன உலகம் என்று நினைத்தேன். வெறுப்பு வந்தது. அதனால் தான் அப்படிப் பேசினேன். உனக்கு எனது பேச்சால் மனவருத்தமேற்பட்டால் என்னை மன்னித்துக் கொள்'' கண் கலங்கினான் சிவம்.

நாகராசா உருகிப் போனான். ''நீ இல்லாமல் என்னால் வாழமுடியாது. நீ தான் என்னை மன்னிக்க வேண்டும்'' என்றான் நாகராசா.

# பருவத்தில் பயிர்

மாசிமாதம். பனி மூசிப் பெய்து கொண்டிருந்தது. திருமகள் போர்வையை இழுத்து மூடினாள். காலை ஏழுமணியாகியும் குளிர் குறையவில்லை. வாரத்தில் ஐந்து நாட்கள் தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைக்குச் செல்வதற்காக விடியற்காலை ஐந்துமணிக்கு எழும்பிக் குளித்தல் வேண்டும். ஏழுமணிக்குப் புறப்பட்டால் தான் ஏழுபதினைந்துக்குப் பஸ் ஸ்ராண்டில் இருந்து புறப்படும் பஸ்சைப் பிடிக்கலாம். அதில் கூட்டம் அதிகமாக இருக்கும். தீவகப் பகுதிக்கு வேலைக்குச் செல்லும் அரச ஊழியர்களில் பெரும்பான்மையானவர்கள் அதில் தான் பயணம் செய்வார்கள். அதில் சீற் பிடிப்பது மிகவும் சிரமம். தினமும் அவள் நின்றே பயணிப்பாள். பின் பாடசாலையால் வந்து சேர நான்குமணியாகி விடும்.

அவள் யாழ்ப்பாணப் பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றினாள். அவளுக்கு வயது நாற்பது. மாவட்டத்திற்கு வெளியே கஷ்டப் பிரதேசத்தில் அவள் கடமை செய்யாததால் அவளைச் சென்ற வருடம் கஷ்டப் பிரதேசமான தீவகத்திற்கு இடமாற்றம் செய்திருந்தார்கள்.

மழை காலத்திலும் பனி காலத்திலும தான் போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கும். அந்தக் காலங்களில் அவள் பஸ் வண்டியில் பயணம் செய்வாள். ஏனைய நாட்களில் மோட்டார்ச் சைக்கிலில் செல்வாள். தீவகப் பாடசாலையில் மாணவர்கள் மிகவும் குறைவு. தரம் ஆறிற்கு மேல் தான் சங்கீத பாடம் உண்டு. அவள் கற்பிக்கும் பாடசாலையில் நூற்றியம்பது மாணவர்கள் கல்வி கற்றனர். மாணவர்களின் வரவு மிக மிகக் குறைவு. சராசரி நூறு மாணவர்கள் வரை தான் வருவார்கள். ஆரம்பத் தரங்களில் பத்துப் பதினைந்து மாணவர்கள் இருப்பார்கள். தரம் ஐந்து சித்தியடைந்ததும் சில மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று விடுவார்கள். அதனால் மேல் வகுப்புக்களில் பத்துக்கும் குறைவான மாணவர்கள் தான் இருப்பார்கள். தரம் ஆறிற்கு மேல் அழகியற் பாடம், சங்கீதம், நடனம், சித்திரம் என மூன்றுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் நடனத்திற்கும் சித்திரத்திற்கும் சென்று விடுவார்கள். சங்கீதத்தை விரும்புவது குறைவு. அதனால் சில வகுப்புக்களில் சங்கீதத்திற்கு மாணவர்கள் இருப்பதில்லை.

பத்து வருடங்கள் பட்டணப் பாடசாலையில் முப்பது, நாற்பது மாணவர்களுக்குச் சங்கீதம் கற்பித்த திருமகளுக்கு இரண்டு, மூன்று மாணவர்களுக்குக் கற்பிப்பது வெறுப்பைக் கொடுத்தது. காலப்போக்கில் அது பழகிவிட்டது. அதனால் இப்போது அவளுக்கு அப் பாடசாலை மிகவும் பிடித்துவிட்டது.

வெளியே யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு வேண்டா வெறுப்பாகப் போர்வையை விலக்கி விட்டு வெளியே வந்தாள்; ''ஏழரைமணியாச்சு இன்னும் நீ எழும்பவில்லையா..?'' என்று கேட்டவாறு வாசலில் நின்றாள் அவளது பள்ளித்தோழி கோகிலா.

''சூரியன் உதிக்கு முன் எழும்ப வேண்டும் என்று படித்தனீ. அதைத் தான் படிப்பிக்கிறாய். இப்ப நண்பகலில் எழும்பினால் என்ன அர்த்தம்?'' கோகிலா கேட்டாள்.

கோகிலா தரம் ஒன்றில் இருந்து அவளோடு படித்தவள். அவளின் உயிர்த்தோழி. ஓ.எல் படிக்கும் போது கடை வைத்திருக்கும் ஒருவனைக் காதலித்தாள். வீட்டில் பலத்த எதிர்ப்பிருந்தது. அதனால் அவளைப் பாடசாலையால் பெற்றோர் மறித்துவிட்டனர். அந்த நேரம் காதல் தூது சென்றவள் திருமகள். திருமகளிடம் கோகிலாவின் காதலன் பிரசாந்தன் கடிதம் கொடுத்து விடுவான். அதை அவள் கோகிலாவுக்குக் கொடுக்கக் கோகிலா பதில் கொடுப்பாள். இப்படிச் சில காலம் நடைபெற்றது. அதுவும் அகப்பட்டதால் பிரசாந்தன் அவளை அழைத்துச் சென்றுவிட்டான். இப்போது அவளுக்கு மூன்று பிள்ளைகள்.

''நான் எழும்பி என்ன செய்வது? உன்னைப் போலப் புரிசன் இருக்கா? பிள்ளைகள் இருக்கா? அம்மா சமைத்து வைத்திருக்கிறா. பல்லைத் துலக்கிச் சாப்பிட்டு விட்டுத் திரும்பவும் படுக்க வேண்டியது தான்.'' விரக்தியுடன் சிரித்தாள் திருமகள்.

முன்பென்றால் அதிகார தோரணையில் பேசும் திருமகள் அண்மைக் காலமாக விரக்தியுற்றிருக்கிறாள். அதை அவள் மறைக்க முற்பட்ட போதும் முடியவில்லை. கோகிலா கண்டு கொள்வாள்.

''அந்தநேரம் நான் காதலிக்கேக்கை என்னை நீ கண்டபடி ஏசினனீ. பிள்ளைகள் பிறந்த போது நான் வந்து சொன்னால் ஏசினனீ. இப்ப வருத்தப்படுகிறாய். இப்பத்தேற் காலப் படித்த பெண்கள் உத்தியோகம் தரம் அந்தஸ்து என்பவற்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்துவிட்டு நாற்பது வயது கடந்த பின்பு தான் கலியாணம் கட்டாததை எண்ணிப் புலம்பீனை. இப்ப என்ன உனக்கு வயது போய்விட்டதா? நாற்பது வயது தானே. என்ரை மச்சான் கணக்காளராக இருக்கிறார். நாற்பத்துமூன்று வயது வாற கிழமை தான் கலியாணம். உன்னட்டை அழகான பெறுமதியான வீடு இருக்கு. நல்ல சம்பளமுள்ள தொழில் இருக்கு. தேவையானளவு பணம் இருக்கு. இப்ப சொன்னாலும் புறோக்கர்மார் கொண்டு வருவினை..'' என்றாள் கோகிலா.

''இப்பவும் பேசிவரீனை தான். இப்பத் தான் எனக்குக் கவலையாக இருக்கு; பயமாக இருக்கு; ஏக்கமாக இருக்கு. எமது பாடசாலையில் ரூபன் என்றொரு ஆசிரியர் இருக்கிறார். அவன் காதலித்துத் தான் திருமணம் செய்தவர். அவர் பட்டதாரி ஆசிரியர். தமிழைக் கற்பிக்கிறார். அவரைச் சந்தித்த பிறகு தான் வாழ்க்கையை முழுமையாக இழந்து

விட்டதை உணர்கிறேன். மிகவும் நல்ல மனிதன். தனது மனைவியையும் குடும்பத்தினரையும் உயிராக நினைப்பவர். எனக்குச் சில சமயங்களில் ஆலோசனை கூறுவார். வீட்டுக்கு வந்து ஆறுதலாக இருந்து யோசித்துப் பார்த்தால் அவர் கூறியவை யாவும் உண்மையானவை என்று தெரியும்; ‘‘திருமகள் எதையும் உரிய நேரத்தில் செய்து விட வேண்டும். நம் முன்னோர் இயற்கையை அனுசரித்தே வாழ்ந்து வந்தனர். எனது தந்தையார் ஒரு விவசாயி. அவர் தனது தகப்பனார் சொன்னபடியே விவசாயம் செய்வார். கன்று நடுதல் தொடங்கி அறுவடை முடியும் வரை ஒரு அட்டவணைப்படியே சகல செயல்களையும் செய்வார். ஒன்றுவிட்ட ஒரு நாளைக்கு வெண்டிக்காய் முறித்தல் வேண்டும். நான்கு நாட்களுக்கொரு முறை இறைத்தல் வேண்டும். உரிய நேரத்தில் களை பிடுங்குதல் வேண்டும். இல்லாவிட்டால் பயிர்கள் பயன் தராது. அது போன்றது தான் வாழ்க்கையும். அந்தந்த நேரம் அதையதைச் செய்தல் வேண்டும். எம்முன்னோர்கள் பதினெட்டு வயதிற்கு முன் தமது பெண்பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து கொடுத்து விடுவார்கள். இப்போ திருமணவயது ஐம்பதாக உயர்ந்துவிட்டது. அந்த வயதிலை செய்தால் தான் வாழ்க்கையை ரசித்துச் சுவைத்து அனுபவிக்கலாம். அந்த நேரம் கஷ்டங்கள், கரைச்சல்கள் பலவும் வரும் தான். ஆனால் அவையெல்லாம் பெரிதாக இராது. இப்ப முப்பத்தைந்து நாற்பது வயதுக்காரருக்கு டயபிற்றீஸ், பிறசர், கொலஸ்ரோல் என்று பல வருத்தங்கள் வருகிறது. எனது மச்சானுக்கு நாற்பது வயது. சென்ற வருடம் தான்

திருமணம் செய்தவர். போனகிழமை இருந்தாப் போலை மயங்கி விழுந்திட்டார். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றால் சுகர் நாணூறென்று டொக்ரர் சொன்னார். பொம்பினை பகுதி நோயை மறைத்துத் திருமணம் செய்ததென்று ஒரே பிரச்சினை. அப்பா சொல்வது போல வெண்டிக்காயை ஒரு நாள் தவறவிட்டு முறித்தால் அது எதற்கும் உதவாது. அது போல தான் வாழ்வும். உரிய வயதில் திருமணமாகாவிட்டால் வாழ்வில் சுவை இருக்காது'' என்பார். அது உண்மை'' கண் கலங்கினாள் திருமகள்.

``நீ எப்பவோ செய்திருக்கலாம். எம்மோடு படித்த அரவிந்தன் உன்னை விரும்பியவன். அவன் தொழிலில்லாதவன். குடிகாரன் என்று வெறுத்தாய். இப்ப அவன் பெரிய முதலாளி. அவன் பலருக்கு வேலை கொடுத்துள்ளான். திரு யாரும் நினைத்தபடி உலகம் இயங்குவதில்லை. ஒரு காலத்தில் கெட்டுப் போயிருந்தவன் இன்னொரு காலத்தில் மேலானவனாக இருப்பான். ஒரு காலத்தில் மேலானவனாக இருந்தவன் இன்னொரு காலத்தில் கேவலமானவனாக இருப்பான். இது இயற்கை. இதைப் படித்த பலர் உணராமையினால் தான் இன்று வேதனைப்படுகின்றனர். ரவீந்திரன் படித்துவிட்டு வேலை கிடைக்காததால் பீயோனாக வேலை செய்தவன். அவனுக்கு உன்னைப் பேசிய போது பட்டதாரியான நான் பீயோனைச் செய்வனா என்று அதிகார தோரணையில் கேட்டனீ. பிறகு அவன் ஆசிரியராகிப் பதவி உயர்வு பெற்று இப்ப

பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருக்கிறான்.'' மூச்சுவிட்டாள் கோகிலா.

திருமகள் எதுவும் பேசவில்லை. அதனால் கோகிலா சொன்னாள்; ''எதையும் நாம் ஆராயாமல் பேசக்கூடாது. அதைவிட எமது உள்ளத்தில் உள்ளவற்றைப் பகிரங்கமாகவும் பேசக்கூடாது. நீ ரவீந்திரனைப் பேசி வந்த போது நீ தரகனுக்கு என்ன சொன்னனீ. சிந்தித்துப் பார்.''

அப்போதும் திருமகள் பேசவில்லை; ''கலியாணம் என்பது பணம், பொருள், வீடுவளவு, காணிபூமி போன்றவற்றை இலவசமாகப் பெறல். அத்துடன் மாப்பிளைக்கு வேலைகள் செய்வதற்கு ஒரு வேலையாள். அவற்ரை இச்சைகளைத் தீர்த்துப் பிள்ளைகளைப் பெறும் இயந்திரம். இப்படித் தான் ஆண்கள் பெண்களை நினைக்கிறார்கள். இப்படியான திருமணம் எனக்கு வேண்டாம்.'' என்றனீ. அப்போது நான் வந்து உனக்குப் புத்திமதி சொன்னனான். நீ கேட்கவில்லை. இப்ப கவலைப்படுகிறாய். இனி என்ன செய்வது? வீட்டில் பிள்ளைகள் தேடப்போகுது. மூத்தவன் பல்கலைக்கழகத்திற்கு வெளிக்கிட்டுடுவன். இளையவன் ரீயூசனுக்குப் போக வேணும். மகளின்ரை சாமத்தியச்சடங்கு வாற திங்கட்கிழமை. அதைச் சொல்லத் தான் வந்தனான். இந்தா காட். நாளைக்கே வா. கன வேலைகள் இருக்கு. நீ தான் என் உயிர்த்தோழி. எங்களைச் சேர்த்து வைத்தனி.

நான் வாறன்’ என்று சொல்லிவிட்டு அவளின் பதிலை எதிர்பாராது நடந்தாள் கோகிலா.

கோகிலா சென்ற பின்பு மீண்டும் கட்டிலில் வந்தமர்ந்தாள் திருமகள். அவளுக்கு ரவீந்திரனைப் பேசிய போது கோகிலா அதை அறிந்து வந்து சொன்னாள்; “பேசிவாற திருமணங்களை ஒவ்வொரு குறை கண்டுபிடித்துத் தட்டிக்கழித்துக் கொண்டு வாறாய். இது பெரும் துன்பத்தைத் தரும். பிற்காலத்திலை அதை நினைத்து வருந்துவாய். நீ நினைப்பதைப் போல பணத்தை இலகுவில் சம்பாதிக்கும் முறையோ அல்லது கணவனின் வேலைக்காரி யாகும் தன்மையோ அல்லது பிள்ளைகளைப் பெறும் வழியோ அல்லத் திருமணம். அது ஒரு தெய்வீக உறவு. கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து உறவாடும் போது சொர்க்கம் தெரியும்; இதயத்தில் ஒரு புதுமையான உணர்வு உருவாகும்; புதுமையான எண்ணங்கள் பெருகும். இதைச் சொல்லில் புரிய வைக்க முடியாது. வாழ்ந்து பார்த்தால் தான் தெரியும். உனது சகோதரன் ஒருவன் வெளிநாட்டில் இருக்கிறான். அவன் வீட்டுக்கு வந்த போது கொண்டு வந்த அந்த நாட்டு ரொபி ஒன்றை எனக்குத் தந்தாய். அதன் சுவையை சொல்லால் சொல்ல முடியாது. அனுபவித்துத் தான் அறிய வேண்டும். நீ அந்த ரொபியைத் தராது அதன் சுவையைச் சொன்னால் அனுபவிக்க முடியுமா? அது போன்றது தான் திருமணம். சீதனமாக கொடுக்கப்படும் பொருட்கள் யாவும் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கே உதவுகின்றன. எனது கணவர்

எனக்கருகில் வந்தால் நான் பரவசமாகி விடுவேன். அதன் பின் அவர் ஏவும் வேலைகளைச் செய்யும் போது அதில் ஒரு சுகம் இருக்கும். அன்புள்ளவர்கள் வேலையைப் பங்கிட்டுச் செய்வார்கள். உன்னோடு கற்பிக்கும் ஒரு ஆசிரியையைக் கேட்டுப்பார். பெரும்பாலும் அவளின் கணவன் தான் சமையல்காரனாக இருப்பான்.'' திருமகள் யோசித்துப் பார்த்தாள். அவளுடன் பணியாற்றும் காயத்திரி சொல்வாள்; ''திரு கணவனைக் கைக்குள்ப் போடும் வழிவகைகளைத் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். அது தெரிந்து அவரைக் கைக்குள்ப் போட்டுவிட்டால் உடுத்தும் உடைகளையும் தோய்ப்பிக்கலாம்.''

''நீ பெண்களைப் பிள்ளை பெறும் இயந்திரம் என்றா நினைக்கிறாய். அது உன்னுடைய அறியாமையைக் காட்டுகிறது. கடவுள் படைத்த பெண் உயிர்களெல்லாம் வம்சத்தை வளர்க்கவே படைக்கப்பட்டன. உனக்கென்று ஒரு பிள்ளை பிறந்தால் அது உன்னுடைய குடும்பத்தின் சொத்து. உன்ரை வம்சத்தின்ரை வளர்ச்சி. பெற்ற பிள்ளையைத் தூக்கி முத்தமிட்டால் எவ்வளவு இன்பம். பிள்ளை வளர்ந்து எமக்குச் சேவை செய்தால் அதை விட இன்பம். இப்போ எனது மூத்தமகன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளான். அது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தந்தது. தெரியுமா?'' கோகிலாவின் வார்த்தைகள் காதில் ஒலித்தன.

‘‘இப்போ உன்ரை போக்குப் பிழை. நெடுக யோசித்துக் கொண்டிருக்கிறாய். கேட்டால் பதில் சொல்கிறாயில்லை. சரியாகச் சாப்பிடுவதும் இல்லை’’ தாயார் ஏசியது நினைவுக்கு வந்தது.

பாடசாலையில் ஓ.எல் படிக்கும் ஒரு பெண்பிள்ளை தன்னுடன் படிக்கும் மாணவனுக்குக் காதல் கடிதம் எழுதி அவனது கொப்பிக்குள் வைத்துவிட்டாள். அதை அறியாத அவன் பாடக்குறிப்புகளை எழுதிவிட்டு ஆசிரியரிடம் காட்டச் சென்ற போது அது கீழே விழுந்துவிட்டது. அதை ஆசிரியர் எடுத்து வாசித்துவிட்டு அதிபரிடம் கொடுத்தார். அதனால் பெரும் பிரச்சினை பாடசாலையில் உருவானது.

‘‘முளைத்து மூன்று இலை விட முன்னம் காதலா..?’’ என்று அதிபர் கண்டித்தார். அதற்கு ரூபன் ஆசிரியர் சொன்னார்; ‘‘இது காதல் ஆரம்பமாகும் பருவம். நம் முன்னோர் பதினாறு வயதில் பெண்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். அதனால் அப் பிரச்சினையைக் கவனமாகக் கையாளுங்கள். எதிர்ப்பும் பலாத்காரமும் காதலை வளர்க்குமே தவிர அற்றுப் போகச் செய்யாது’’

அவ் வார்த்தைகள் திருமகளின் காதில் ஒலித்தன; ‘‘திருமணம் என்பது நீ நினைப்பதைப் போன்றதல்ல. அன்பு, பரிவு, பாசம் என்பவற்றைத் தந்து தனிமையைப் போக்கும். ‘‘கோகிலா அருகில் இருந்து சொல்வதைப் போலிருந்தது.

அதை யோசிக்கத் தலை வெடித்து விடும் போலிருந்தது திருமகளுக்கு.

“நீ நினைக்கிற மாதிரியில்லை ஆண்கள். பெண்கள் தம்மை மேலானவர்களாக மதிக்க வேண்டும் என்றே எல்லா ஆண்களும் விரும்புவார்கள். அவர்கள் எண்ணுவதைப் போலப் பெண்கள் நடந்துவிட்டால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அடிமையாகி விடுவார்கள். இது தெரியாமல் நீ அலட்டுகிறாய்” கண் சிமிட்டினாள் மைதிலி. மைதிலி திருமகளுடன் பட்டணப் பாடசாலையில் கற்பித்த ஆசிரியை.

“திருமணமான பெண்களிற் பலர் ஆண்களைக் குறை கூறுவதேயில்லை. அவர்களெல்லோரும் ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்று யோசித்தும் திருமகளால் அதற்கு விடை கண்டுபிடிக்க முடியவில்லை.

“நான் தவறான முடிவுகளை எடுத்து விட்டேனோ?” என முதல் தடவையாகச் சிந்தித்தாள் திருமகள்; “சரி போனது போகட்டும். இனியாவது நல்லதைச் சிந்திப்போம்” என நினைத்தவாறு பல் துலக்கச் சென்றாள் திருமகள்.

# வெளிநாட்டு மாப்பிளை

“சிவராசா வாத்தியார் கனடாவாலை வந்திருக்கிறாராம். பத்து வரிசத்திற்கு முன்னம் போனவர். அப்படியே மாறாமல் இருக்கிறாராம். வசதியான ஊர், பணக்கார ஊர், சண்டை சச்சரவில்லாத ஊர். அப்படியான ஊரிலை இருக்கிறவை மகிழ்ச்சியோடை இருப்பினை. செல்வம் செல்வாக்கோடை இருப்பினை. பிறகேன் உடம்பு உருக்குலையுது. ஊர்ச்சனம் முழுக்கச் சென்று பார்க்குதுகள். நான் தான் போகவில்லை. அவர் தம்பிராசண்ணையிட்டை பத்மா சுகமாக இருக்கிறாளோ என்று விசாரிச்சவராம். கொப்பர் வேலையாலை வரமுன்னம் ஒருக்கால் போய்ப் பார்க்க வேணும்” என்றாள் பத்மாவதி.

“அப்பா போக வேண்டாமென்றவர் நீங்கள் போகப் போறியளே?” என்று கேட்டாள் கௌரி.

“ஊர்ச்சனம் முழுக்கப் போகுது. நான் போகாட்டில் குறை வரும். அவர் எங்கடை இரத்த உருத்துக்காரன்” என்றாள் பத்மாவதி.

“நீங்கள் அப்பாவுக்குத் தெரியாமல் போனாலும் ஊரவை சொல்லுவினை. அதனால் அப்பாவுக்குச் சொல்லிவிட்டுப் போங்கோ..” என்றாள் கௌரி.

“ம்” என்ற பெரிதாகப் பெருமூச்சுவிட்டாள் பத்மாவதி; “நேற்று அவரைச் பார்க்கச் சென்ற கனகேஸ்வரியிடம் என்னைப் பற்றி விசாரித்திருகிறார். பத்மாவின் மூத்தமகள் கௌரிக்கு இருபத்தைந்து வயதிருக்கும் கலியாணம் கட்டி விட்டாளோ என்றும் கேட்டவராம். அத்துடன், “எனது மூத்தமகனின் மகன் கனடாவில் இன்ஜினியராக இருக்கிறான். அவனுக்கு பெண் பார்க்கிறேன். இங்கு இனத்தவர்களிடம் பொருத்தமான பெண் இருந்தால் சொல்லு” என்றவராம். அவருடைய இனத்தவையெல்லாம் சுகம் விசாரிக்கின்ற சாட்டில் சென்று அவரைப் பார்த்துப் பேசிவிட்டு வருகிறார்களாம்” மீண்டும் பெருமூச்சுவிட்டாள் பத்மாவதி.

பத்மாவதிக்கு ஒரேயொரு பெண் கௌரி. பட்டதாரிப் பயிலுனராக மன்னாரில் கடமை புரிகிறாள். கணவன் வடிவேலன் கச்சேரியில் கிளாக்காகப் பணிபுரிகிறான். மிகவும் வசதியான குடும்பம்.

அன்று மாலை வேலை முடித்து வந்த வடிவேலனுக்குத் தேநீர் கொடுத்து விட்டுப் பத்மாவதி சொன்னாள்; “சிவராசா மாஸ்ரர் கனடாவால் வந்திருக்கிறார். ஊர்ச்சனம் எல்லாம் போய்ப் பார்க்குது. பழைய பகையை

நினைத்து அவரைப் போய்ப் பார்க்க வேண்டாம் என்று கூறிவிட்டீர்கள். இருந்தாலும் போறவாறவையிடம் எங்களைப் பற்றி விசாரித்தவராம். ஒப்புக்கு ஒருமுறை போய்ப் பார்த்தால் என்ன?''

''எனக்கு அவரிலை எந்தக் கோபமும் இல்லை. இங்கே இருக்கும் போது இயக்கத்திற்காக உயிரைக் கொடுப்பவர் போல நடித்துத் தனது பிள்ளைகளையெல்லாம் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டுத் தானும் போய்ச் சேர்ந்திட்டார். அதற்குப் பின்பு போரால் பாதிக்கபட்டவர்களுக்கு உதவினவரே? இப்ப பேரனுக்குப் பெண் பார்க்க வந்திருக்கிறார். அவற்ரை ஒன்றுவிட்ட தங்கச்சியார் கண்மணிக்கு இரண்டு பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். இரண்டும் இயக்கத்திற்குச் சென்று புனர்வாழ்வு பெற்றவை. அதில் ஒன்றைச் செய்யலாம் தானே. அதை விட்டுவிட்டு போறவாறவர்களிடம் நல்ல பொம்பிளையாகக் கேட்கிறார். அது தான் எனக்குப் பிடிக்கவில்லை. நீ வேணுமென்றால் போட்டு வா'' என்றார் வடிவேலன்.

''நீங்களும் வாருங்கோவன்'' கெஞ்சுவது போலக் கேட்டாள் பத்மாவதி.

''வடிவேலன் பத்மாவதி மீது அதீத அன்பு கொண்டவர். அவள் இது வரையில் அவரை எதிர்த்துப் பேசியதில்லை. அவர் சொன்ன வார்த்தைகளைத் தட்டியதுமில்லை. அவள் அவன்ர எந்த வேலையையும்

செய்யவிடுவதில்லை. மாதாமாதம் தனது முழுச்சம்பளத்தையும் கொண்டு வந்து கொடுப்பார். வரவுசெலவு எல்லாம் அவள் தான்.

‘‘பிடிவாதம் பிடிக்காதைங்கோ. எழுபது வயதிற்கு மேற்பட்ட மனிசன். இனி ஊருக்கு வருமோ தெரியாது. அவரவர் செய்வது அவரவருக்கு. நீங்கள் மிகவும் நல்லவர் என்று பெயரெடுத்திருக்கிறீர்கள். ஏன் குறை கேட்பான்.’’

‘‘சரி வா’’ என்ற வடிவேலன் அவளையும் அழைத்துக் கொண்டு சிவராசா தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றார். ஊரவர்கள் பலர் அங்கு கூடி இருந்தனர்.

வடிவேலனையும் பத்மாவதியையும் கண்டதும் சிவராசா எழுந்து வந்து வரவேற்றார். பழைய நிகழ்வுகளை அவர் நினைவுபடுத்தினார். ஊரவர்களைப் பற்றி விசாரித்தார். பின்; ‘‘எனது பேரன் கனடாவில் இன்ஜினியராக இருக்கிறான். சாதகம் கொண்டு வந்திருக்கிறேன். உங்களுடைய மகளுக்குப் பார்ப்போமா…?’’ என்று கேட்டார் சிவராசா.

பத்மாவதி தான் கேட்க நினைத்ததை அவர் கேட்டுவிட்டாரென்று நினைத்துப் பெருமகிழ்வுடன் சிரித்தாள்.

‘‘எனக்கு ஒரே ஒரு மகள். இங்கு நல்ல உத்தியோகம் பார்க்கிறாள். நல்லவீடு இருக்கு. ஐம்பது பரப்புத் தோட்டக்காணி இருக்கு. ஒரு டொக்ரருக்குக் கொடுக்கக் கூடியளவு பணம் இருக்கு. பிறகேன் அவளை

வெளிநாட்டுக்கு அனுப்புவான். ஊரிலை நாலைந்து பிள்ளைகளுள்ளவை எல்லாப் பிள்ளைகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டுத் தள்ளாத வயதிலை சாப்பாட்டுக்குக் கஷ்டப்படீனை. அவர்களால் சமைக் முடிவதில்லை. இனத்தவை ஊரவை அவைக்கேற்ற சாப்பாடு கொடுப்பதில்லை. கவனிப்பு இல்லை. அந்த நிலைமை எனக்கு வருவதை நான் விரும்பவில்லை.'' என்றார் வடிவேலன்.

தனது கணவன் அப்படிச் சொல்வார் என எதிர்பாராத பத்மாவதி திகைத்துப் போனாள். அவர் சொன்னால் சொன்னது தான். பின்மாறமாட்டார் என்பது அவளுக்குத் தெரியும்.

''கண்மணி சரியாய்க் கஷ்டப்படுகிறாள். அவள் உங்களுக்கு இரத்த உருத்துள்ளவள். இரண்டு பொம்பிளைப் பிள்ளைகள். பார்த்துச் செய்யுங்கள்'' என்றார் வடிவேலன்.

அவர் அதைச் சொன்ன போது சிவராசாவின் முகம் மாறுபட்டது. அதை வடிவேலன் கண்டு கொண்டார்.

''நாங்கள் வரப்போறம்.'' என்று எழுந்தார் வடிவேலன்.

''சரி நான் சொன்னதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கோ. கனடாவுக்கு வந்தால் மகாராணி மாதிரி வாழலாம்'' என்றார் சிவராசா.

வடிவேலனுக்குச் சிரிப்பு வந்தது; ‘‘இங்கே அவள் மகாராணி மாதிரித் தான் வாழ்கிறாள்’’ என்று சொல்ல வேண்டும் போல இருந்தது. ஆனால் அவர் சொல்லவில்லை.

மறுநாள்க் காலை கண்மணி வடிவேலனின்வீட்டுக்கு வந்தாள்.

‘‘அண்ணை, நீங்கள் என்னுடைய உடன்பிறந்த சகோதரர்களை விட மேலானவர். எனது சகோதரர்கள் சிவராசா மாஸ்ரரின் வீட்டுக்குச் சென்று தம்முடைய பெண்பிள்ளைகளைச் செய்யும்படி கேட்டுள்ளனர். ஆனால் நீங்கள் ஒருவர் தான் எனது பிள்ளைகளில் ஒன்றைச் செய்யச் சொன்னீர்கள். உங்கள் மகள் சீரோடும் சிறப்போடும் வாழ்வாள்’’ என்று கண் கலங்கினாள் கண்மணி.

‘‘சிவராசா மாஸ்ரரின் வீட்டுக்குச் சென்று வந்த நேரம் முதல் பத்மாவதியின் முகம் மாறியிருந்ததைக் கண்டு வருத்திய வடிவேலன் பத்மாவதியை அழைத்துச் சொன்னார்; ‘‘பத்மா, நீ என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவு தானா..? எனது நண்பன் சரவணபவன் கனடாவில் இருப்பது உனக்குத் தெரியும். அவன் கனடாவுக்குச் சென்ற நாள் முதல் இன்று வரை எம்மை மறக்காது அடிக்கடி தொடர்பு கொள்வான். கௌரிக்கு வருடம் தீபாவளிக்குத் தவறாது உடுபுடைவைகள் அனுப்புவான். அவன் எனக்கு நேற்று ரெலிபோன் பண்ணினவன்…’’ நிறுத்தினர் வடிவேலன்.

சோர்ந்து போயிருந்த பத்மாவதி தலையை நிமிர்த்திப் பார்த்தாள்; ''சிவராசா இங்கு இருக்கும் போது தில்லுமுல்லுகள் பலவும் செய்தவர். ஊர்ப் பள்ளிக்கூடத்திற்கு அதிபராக இருந்து பாடசாலைக்கு வந்த பணத்தைச் சுருட்டியதாக இப்பவும் பலர் கதைக்கின்றனர். அவரது பேரன் சரியான குடிகாரன். போதைவஸ்துப் பாவிப்பவன். அதனால் தான் அவர் இங்கு பெண் தேடுகிறார்.''

''வடிவேலன் மிகவும் நேர்மையானவர். பொய் சொல்லமாட்டார். அதை விடச் சரவணபவன் எமது குடும்பத்தின் மீது பெரும் அபிமானம் உள்ளவன். அவன் பொய் சொல்லமாட்டான்.'' என்று நினைத்தாள் பத்மாவதி.

''பத்மா அவள் எம்மோடு இங்கேயே வாழட்டும். எம்மிடம் போதியளவு பணமிருக்கு. தனிப்பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு எம்மால் நிம்மதியாக வாழமுடியாது. அதோடு எமக்கேன் பணம். தம்பிராசாவின் மகன் இன்ஜினியர். அவனுக்குக் கௌரியைச் செய்ய விருப்பமாம். எம்மைப் போய்க் கேட்கும்படி வரதராசன் சொன்னவன். நல்ல நாளிலை போய்க் கேட்பம்'' என்றார் வடிவேலன்.

''தம்பிராசாவின் மகன் கௌரியுடன் படித்தவன். சென்ற கிழமை ஒருநாள் வந்து கௌரியோடு கனநேரம்

கதைச்சிட்டுப் போனவன். நான் என்ணண்டு கேட்கவில்லை'' என்றாள் பத்மாவதி.

அப்போது அங்கே வடிவேலனின் தங்கை கமலாம்பிகை வந்தாள். அவள் எதைச் செய்தாலும் வடிவேலனைக் கேளாது செய்யமாட்டாள்.

''நீங்கள் வேலைக்குப் போய்விடுவீர்கள் என்று அவசரமாக வந்தனான். சிவராசா மாஸ்ரர் தனது பேரனுக்குக் கௌரியைப் பெண் கேட்டவராம். நீங்கள் மறுத்திட்டீங்களாம். அதாலை அவர் என்ரை மகளைக் கேட்கிறார். உங்களுக்கு விருப்பமே?''

''மச்சான் என்ன சொன்னவர்'' வடிவேலன் கேட்டான்.

''அவர் ஏதாவது சொல்லுறவரே. போய்க் கொண்ணையோடை கதைத்து முடிவெடு என்றவர்.'' என்றாள் கமலாம்பிகை.

அவர் சிறிதுநேரம் பேசவில்லை; ''கமலா, இந்தச் சம்பந்தத்தை விட்டுடு.''

''சரி அண்ணை'' எந்தவித யோசனையுமின்றிச் சொன்ன தன் தங்கையைப் பாசத்துடன் பார்த்தார். அவரால் அதற்கான காரணத்தைக் கூறாதிருக்க முடியவில்லை.

''கமலா, உள்நாட்டில் இருப்பவர்களையே தீர விசாரியாது முடிவெடுக்க முடியாது. கண்காணாத இடத்தில்

இருக்கும் ஒருவரைப் பற்றி எப்படி முடிவெடுக்க முடியும். சரவணபவனை விசாரித்தனான். மாப்பிளை சரியில்லை எண்டவன். அதாலை தான் நான் மாட்டணெண்டனான். சிவராசா நல்ல குணமுள்ளவரில்லை. இங்கு பணக்காரர்களாகப் பார்த்துத் தான் பெண் கேட்கிறார். ஊரில் பெண் எடுக்க வேண்டும். கஷ்டப்பட்ட குடும்பத்தில் பெண் எடுக்க வேண்டும் என்பவன் ஏன் பணக்காரர்களின் பெண்களாகப் பார்த்துக் கேட்க வேண்டும்? இதை நீ யாருக்கும் சொல்லிவிடாதே. நாம் உண்மையைச் சொன்னாலும் ஊரவர் வேறு விதமாகத் தான் கதைப்பார்கள்'' என்றார் வடிவேலன்.

# உறவின் முடிவு

சின்னத்துரை பிரான்சுக்குச் சென்று நான்கு வருடங்கள் முடிந்துவிட்டன. அதற்கு முன் அவரது மூன்று ஆண்பிள்ளைகளும் பிரான்சுக்கு சென்றுவிட்டனர். சின்னத்துரையின் நான்காவது மகன் பிரதீபன் ஐந்து வருடங்களுக்கு முன்பு பிரான்சுக்கு வந்தான்.

சின்னத்துரையின் உயிர் நண்பன் நடேசன். இருவரும் யாழ்ப்பாணம் கச்சேரியில் அமைந்துள்ள உணவுக் களஞ்சியத்தில் காவலர்களாக வேலை செய்தவர்கள். சின்னத்தரைக்கு ஐம்பத்தைந்து வயது நடைபெற்ற போது அவரது மூத்தமகன் திவாகரன் அவரைப் பிரான்சிற்கு அழைத்தான். அவருக்கு அங்கு செல்ல விருப்பமில்லை. அவரது மனைவி விசாலாட்சி பத்து வருடங்களுக்கு முன் காலமாகிவிட்டாள். அதனால் அவரே சமைத்துப் பிள்ளைகளுக்குக் கொடுத்தார். ஒவ்வொரு பிள்ளைகளும் செல்லச் செல்லச் சமையல் வேலை குறைவடைந்து கடைசிமகன் பிரதீபனும் செல்ல அவர் தனிமைப்பட்டார்.

சிலகாலம் தனியே இருந்து சமைத்துச் சாப்பிட்ட அவரை மூத்தமகன் திவாகரன் வந்து அழைத்துச் சென்றுவிட்டான்.

சின்னத்துரையின் உயிர்நண்பன் நடேசன். அவர்கள் இருவரும் ஒருபோதும் பிரிந்திருந்ததில்லை. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை. அன்று சின்னத்துரை நடேசனின் வீட்டுக்குக் காலையில் சமைத்து வைத்துவிட்டு வந்துவிடுவார். நடேசனின் மனைவி பூமணி மிகவும் நல்லவள். சின்னத்துரையின் மீது பாசம் கொண்டவள். மனைவி இல்லாததால் அவள் சமைக்கும் உணவைக் கணவனிடம் கொடுத்து விடுவாள். ஞாயிற்றுக்கிழமையில் இருவரும் சேர்ந்து கூழ் காய்ச்சுவார்கள். நடேசன் இருவருக்கும் தென்னங்கள்ளு வாங்கி வருவான். கூழையும் கள்ளையும் மாறிமாறி இருவரும் குடிப்பார்கள். மத்தியான வேளையில் சின்னத்துரை குளிப்பதும் நடேசனது வீட்டுக் கிணற்றில் தான்.

சின்னத்துரையின் பிள்ளைகள் பாடசாலை இல்லாத நாட்களில் நடேசனது வீட்டுக்கு வருவார்கள். அப்போது பூமணி அவர்கள் விரும்பும் உணவு வகைகளை வாங்கிச் சமைத்துக் கொடுப்பாள். பிள்ளைகளும் பூமணி மீது மிகுந்த பற்று வைத்திருந்தனர். அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்ற பின்பு பணம் அனுப்புவார்கள்.

பிரான்சுக்கு வந்த சினனத்துரைக்குத் திடீரென்று நடேசனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அதை விட அவர்கள் குடியிருந்த வீட்டை நடேசன் பராமரித்து வந்தார். பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த குடும்பம் ஒன்று

வீடில்லாமல் கஷ்டப்படுவதைக் கண்ட நடேசன் சின்னத்துரையின் வீட்டை அக் குடும்பத்தினருக்குக் கொடுத்தார். இப்போ அந்த வீட்டை சின்னத்துரை விற்க விரும்புகிறார். விற்பதனால் அதை விற்பதற்கான உரிமையை நடேசனுக்கு அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால் சின்னத்துரை ஊருக்கு வரவேண்டும். பிள்ளைகள் உரிமையை அனுப்புமாறு கூறினர். ஆனால் அவர் தான் இறக்கு முன் தனது நண்பனான நடேசனைப் பார்க்க வேண்டும் என்று கூறினார்.

சின்னத்துரை பிரான்சில் இருந்து நடேசனது வீட்டுக்கு வந்து சேர்ந்தார். நடேசனது இரு பெண்பிள்ளைகளும் இயக்கத்திற்குச் சென்று புனர்வாழ்வு பெற்று வீட்டுக்குத் திரும்பியிருந்தனர்.

சின்னத்துரை நடேசனின் வீட்டிற்கு வந்து அங்கு தங்கியிருப்பது சின்னத்துரையின் உறவினர்களுக்குப் பிடிக்கவில்லை. சின்னத்துரையின் மூத்தமகன் திவாகரன் அவ்வூர்க் கிராமசேவகரின் மூத்தமகளைத் திருமணம் செய்திருந்தான். சின்னதுரையின் தங்கை சிவகாமி ஆசிரியையாகப் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தாள். அவளுக்கு அபிராமி என்றொரு மகள் திருமணமாகாது இருக்கிறாள்.

கிராமசேவகர் நடராசா நடேசனின் வீட்டுக்கு வந்தார். நடேசனின் வீடு ஒரு சிறியவீடு. முற்றத்தில் நின்ற பெரிய வேப்பமர நிழலில் நான்கு பிளாஸ்ரிக் கதிரைகள்

போடப்பட்டிருந்தன. ஒன்றில் நடேசன் இருந்தார். மற்றதில் சின்னத்துரை இருந்தார். சின்னத்துரையும் நடேசனும் எழுந்து நடராசாவை வரவேற்றனர். நடராசா கதிரையில் அமர்ந்ததும் அவர்கள் பேசட்டும் என்று நினைத்து நடேசன் உள்ளே சென்றுவிட்டார்.

''எவ்வளவு வசதியாகப் பிரான்சில் இருந்தனீங்கள். இப்ப இந்தக் குடிசைகள் இருக்கிறீர்கள் மாளிகை மாதிரி உங்களின் மகனின் சீதனவீடு இருக்கு. ஏ.சியும் இருக்கு. அங்கை வாருங்கோ.'' என்றார் நடராசா.

சின்னத்துரை கேலியாகச் சிரித்தார்; ''இந்த வீட்டிலை நான் முப்பது வருடங்களுக்கு மேல் படுத்துறங்கினனான். அப்போது கேட்காத நீங்கள் இப்ப கேக்கிறியள். மூத்தவன் உங்களின் மகளைக் கட்டிய பின் நாம் வாழும் மண் வீட்டை விட்டுவிட்டு எங்களைப் போய்த் தனது சீதன வீட்டில் இருக்கச் சொன்னவன். அப்ப நீங்கள் விரும்பவில்லை. அந்த வீட்டை வாடகைக்குக் கொடுத்தனீங்கள். நான் பெரிதாய் வாழ்ந்து விட்டு வெளிநாட்டுக்குப் போகவில்லை. அதனால் இப்போ எனக்குப் பாதிப்பில்லை'' என்றார் சின்னத்துரை.

நடராசாவால் அதற்குப் பதில் கூற முடியவில்லை. தகப்பனுக்கு வீடு கொடாமையால் சின்னத்தரையின் மூத்தமகன் திவாகரன் நடராசாவின் குடும்பத்தோடு தொடர்பு வைப்பதில்லை.

தேவையில்லாத கதைகளைக் கதைத்தால் விரோதம் தான் வளரும். திருமணம் செய்த நாளில் இருந்து திவாகரன் பிரச்சினைப்பட்டுக் கொண்டே இருக்கிறான். இப்போ ஏதாவது சொன்னால் பிரச்சனைகள் தான் கூடும்'' என்று நினைத்துப் பேசாதிருந்தார் நடராசா.

சின்னத்துரை உள்ளே சென்று ஒரு பெரிய பெட்டியைத் தூக்கி வந்து நடராசாவின் அருகில் வைத்துவிட்டு; ''மருமகள் உங்களிடம் கொடுக்கச் சொல்லித் தந்தவா'' என்றார்.

''மகள், மருமகன், பேரப்பிள்ளைகளெல்லாம் சுகமாக இருக்கிறார்களா..?'' என்று கேட்டார் நடராசா.

''ஓ… பிரச்சினையில்லை'' என்றார் சின்னத்துரை.

''மகளையும் பேரப்பிள்ளைகளையும் பார்க்க மனிசி ஆசைப்படுறா. ஒருமுறை வந்துவிட்டுப் போகச் செல்லுங்கோ''

''நல்லூர்த் திருவிழாவுக்கு இம்முறை வரவேண்டும் என்று திவா சொன்னவன்'' என்றார் சின்னத்துரை.

''அப்படியா..?'' மிகுந்த சந்தோசப்பட்டார் நடராசா.

‘‘வீட்டுக்கு இருக்க வராவிட்டாலும் சாப்பிட வாருங்கோ. நாளைக்குச் சனிக்கிழமை. வாருங்கோ’’ என்றார் நடராசா.

‘‘சரி. நடேசனையும் கூட்டிவருகிறேன்.’’ என்றார் சின்னத்துரை.

‘‘சரி’’ என்றார் நடராசா.

நடராசா சென்ற சில நிமிடங்களில் சின்னத்துரையின் தங்கை சிவகாமி வந்தாள்.

‘‘மாடிவீடு இருக்கக் குடிசையில் வந்திருக்கிறியள். வீட்டை வாருங்கோ’’ என்றாள்.

‘‘இது எனக்கு வசதி. அது சரி உனது மகளுக்குத் திருமணம் செய்யாது ஏன் வைத்திருக்கிறாய்?’’ என்று கேட்டார் சின்னத்துரை.

‘‘சாதகம் பொருந்தினால் மாப்பிளையின் தொழில் பொருந்துவதில்லை. தொழில் பொருந்தினால் மாப்பிளை குடிகாரனாக இருக்கிறார். இப்பிடிப் பல பிரச்சினைகள். உங்களது கடைசி மகனுக்குப் பெண் பார்க்கவில்லையா?’’

‘‘அதுக்குத் தான் பிரதானமாக வந்தனான் உறவைப் பிரிக்கக்கூடாது என்று பிரதீபன் சொல்கிறான்’’

“ஓமண்ணை. இவர் வாறதெண்டு சொன்னவர் நடேசன் குடிகாரன். குடிசை வீட்டுக்குத் தான் வாறது மதிப்பில்லை என்றவர். பின்நேரம் நீங்கள் வந்தீர்களானால் பேசி முடிக்கலாம்” அபிராமியின் முகமெல்லாம் பல்லாக ஒளிர்ந்தது.

“சரி வாறன்”

“ஒன்றுக்கை ஒன்று உறவுவிட்டுப் போகக் கூடாதென்று நீங்கள் நினைப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அப்ப நான் வாறன். பின்நேரம் வாருங்கோ” என்று கூறிவிட்டுப் புறப்பிட்டாள் அபிராமி.

அவள் செல்லத் தாமோதரம்பிள்ளை வந்தார். அவர் அவன் பணிபுரிந்த கச்சேரி உணவுக்களஞ்சியத்தின் ஸ்ரோர்க்கீப்பர். அவரின் பொறுப்பில் தான் அக் களஞ்சியம் இருந்தது. அப்போது அவர் அவரை மதிப்பதேயில்லை.

“எப்பிடிச் சுகமாக இருக்கிறியளோ...? உங்களுக்கென்ன குறை. பெரும் பணக்கார நாட்டிலை இருக்கிறியள்” என்றார் தாமோதரம்பிள்ளை.

அவரே கேள்வியையும் கேட்டு அவரே மறுமொழியும் சொன்னது அவருக்குப் புதிதாக இருக்கவில்லை. வேலை செய்யும் போதும் அவர் இப்படித் தான் பேசுவார்; “இரவு காவலுக்கு இருந்தது யார்..? நீயும் நடேசனும் தான் என்ன?” என்று கேட்பார்.

“இந்த ஊரிலை உத்தியோகம் பார்த்து முன்னேற முடியாது. உன்னைப் போல வெளிநாட்டுக்குப் பிள்ளைகளை அனுப்பினால் தான் பணம் சம்பாதிக்கலாம். எனக்கொரு மகள் திருமணமாகாது இருக்கிறாள். உன்னுடைய மகனின் சாதகத்தைப் பார்ப்பமே. பொருந்தினால் செய்யலாம்.”

“சாதகத்தை நான் கொண்ட வரவில்லை. போய் ஈமெயிலில் அனுப்புகிறேன். ஈமெயில் அற்றஸ்சைத் தாங்கோ” என்றார் சின்னத்துரை.

தாமோதரம்பிள்ளை அதை எதிர்பார்க்கவில்லை. பெருமகிழ்வுடன் சொன்னார்; “வீட்டை போய் எடுத்தாறன். கையோடை மகளின்ரை சாதகத்தையும் கொண்டு வாறன்.”

“சரி” என்றார் சின்னத்துரை.

அவர் சென்ற பின் கல்யாணத் தரகன் கனகரட்ணம் வந்தான். அவனும் அவருடன் வேலை செய்தவன். இப்போது பென்சனெடுத்து விட்டுக் கல்யாணத் தரகனாக பணியாற்றுகிறான்.

“பிரதீபனுக்குப் பெண் பார்க்கிறீர்களாம். என்னட்டைச் சொன்னால் விதம்விதமாய்க் கொண்டருவன்” என்றான் கனகரத்தினம்.

“கைவசம் சாதகங்கள் இருக்கே?” சின்னத்துரை கேட்டார்.

“ஓ பத்துப் பதினைந்து இருக்கு. பொன்னம்பலம் மாஸ்ரரிட்டை ஒரு பெண் இருக்கு. எங்களோடை வேலை செய்த இராமநாதனிட்டை இருக்கு. முதலில் சாதகத்தைத் தாருங்கோ.”

“நான் கொண்டு வரவில்லை. மூத்தவனுக்கு ரெலிபோன் பண்ணினான். நாளைக்கு அனுப்பிறனென்டவன்.”

“மகன் என்ன நட்சத்திரம்?”

“திருவோணம்....”

“பொன்னம்பலம் மாஸ்ரற்ரை மகள் அனுஷம் பொருந்தும்” என்றான் கனகரத்தினம்.

அன்று சனிக்கிழமை. நடராசாவின் வீட்டுக்குச் சாப்பிடச் செல்லத் தயாரானார் சின்னத்துரை. செல்லும் போது பிரான்சில் இருந்து கொண்டு வந்த உயர்ரக மதுப்போத்தல் ஒன்றை எடுத்துப் பையுள் வைத்துக்கொண்டார். அவர் நடேசனைக் கேட்கவில்லை. நடேசன் தான் இங்கு நடைபெறும் சம்பவங்களைத் திவாகரனுக்குக் கூறிப் பிரச்சினைகளைப் பெருப்பிக்கிறான் என்று திவாகரனின் மனைவி அடிக்கடி சொல்வாள். அதனால் நடராசாவுக்கு நடேசனைப் பிடிக்காது. எனினும் அவர் என்ன சொல்கிறார் என்று அறியவே நடேசனும் சாப்பிட வருவான் என்று சொன்னார்.

சின்னத்துரையைச் சந்திப்பதற்காக அவரின் நண்பன் ஒருவன் வந்திருந்தான். அதனால் சின்னத்துரையால் குறித்த நேரத்திற்கு நடராசாவின் வீட்டுக்குச் செல்ல முடியவில்லை. அதனால் நடராசா ஓட்டோவில் அவரைத் தேடி வந்துவிட்டார்.

சின்னத்துரை நடராசாவின் வீட்டுக்கு வந்த போது சாப்பாட்டு மேசையில் சாராயப் போத்தல்களும் ஸ்பிறைட் சோடாவும் இரண்டு கிளாசுகளும் இருந்தன. சின்னத்துரை தான் கொண்டு வந்த சாராயத்தைக் கொடுத்தார்.

மேசையில் இருந்த சாராயத்தில் அரைவாசி முடித்துவிட்டது. சின்னத்துரை பெரிதாகக் குடிக்கவில்லை. நடராசா நன்றாகக் குடித்துவிட்டார்.

‘‘நான் உள்ளதைத் தான் சொல்வேன். உங்களது மகனின் செயல்களால் நான் கவலைப்படுறன்’’

சின்னத்துரை அதைப் பற்றிப் பேசவிரும்பவில்லை. பிரச்சினைகளைப் பேசினால் தீராத பகை தான் உண்டாகும். அதை அவர் விரும்பவில்லை. அதனால் பேச்சை மாற்றினார்; ‘‘இளையவனுக்கு ஒரு பொம்பிளை பார்க்க வேணும். உனக்குத் தெரிந்த இடத்தில் இருந்தால் சொல்லு?’’

‘‘ஒன்றைக் கட்டிப்படுற பாட்டிலை வேறு இடத்தில் கட்டிக் கொடுத்துவிட்டு...’’ என்று வாயுன்னினார். ஆனால் சொல்லவில்லை. வெறியிலும் பயம் இருந்தது.

“என்ரை பிள்ளைகளெல்லாம் கரை சேர்ந்திட்டுது. தங்கச்சீன்ரை பிள்ளை ஒன்றிருக்குக் கேட்டுப் பார்க்கட்டே”

“கேட்டுப்பாரன். உண்மையைச் சொல்லித் தான் செய்ய வேண்டும். பேத்தியாரை மாதிரி அவன் கொஞ்சம் மனநிலை சரியில்லாதவன்; “சின்னத்துரை வார்த்தைகளை முடிக்கு முன் நடராசா சொன்னார்; பேத்தியார் அமாவாசை பறுவத் தினங்களில் பிரச்சினைப்படுறவா. அப்படியே”

வாய் திறக்காது “ம்” என்றார்.

மறுநாள்க் காலை தாமோதரம்பிள்ளையும் வரவில்லை. அவரது தங்கை சிவகாமியும் வரவில்லை.

கனகரத்தினம் வந்து சொன்னான்; “நீ குடிச்சால் கதைக்கிறதைக் கவனமாகக் கதைக்கமாட்டாய். எல்லாவற்றையும் உழறிவிடுவாய். நேற்றைக்குக் குடிச்சுப் போட்டு நடராசாவுக்கு உன்ரை மோனுக்குச் சாடையான மெண்டல் என்று சொல்லியிருக்கிறாய். அது ஊர் முழுக்கப் பரவிவிட்டது. பொன்னம்பலம் மாஸ்ரர் அந்தக் கதை கதையாதை என்கிறார். உங்கடை தங்கச்சி மகளின்ரை குறிப்பை வாங்கிக் கொண்டு போனவா. இப்ப கொண்டு வந்து தந்திட்டுப் போறா.”

சின்னத்துரைக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் சிரிக்கவில்லை; “பின்நேரம் வா. எல்லாவற்றையும் விபரமாய்ச்

சொல்லுறன். இரவைக்கு என்னோடை தங்கு. வீட்டை சொல்லிப் போட்டு வா’’ என்றார் சின்னத்துரை.

‘‘ம் உன்ரை போக்கை என்னாலை புரிந்து கொள்ள முடியேல்லை’’ என்று சொல்லிவிட்டுச் சென்றான் கனகரத்தினம்.

மாலை ஆறு மணிக்குச் சின்னத்துரையின் நண்பர்கள் பலர் நடேசனின் வீட்டில் கூடினர்.

‘‘நீங்கள் எல்லாரும் சாராயத்தைக் குடியுங்கோ. வெளிநாட்டுச் சாராயம் தாராளமாக இருக்கு. நான் பனங்கள்ளுக் குடிக்கப் போறன். நாலு வரிசமாய்க் குடிக்கவில்லை’’ என்றார் சின்னத்துரை.

இரண்டு மணித்தியாலம் கழிந்துவிட்டது. பூமணி காய்ச்சிய ஆட்டுஇறைச்சியின் சுவையை எல்லோரும் மெச்சியபடி சாப்பிட்டனர்.

‘‘கனகு, டேய் கனகரத்தினம், புறோக்கர், கல்யாணப் புறோக்கர். நீ என்ன சொன்னனீ, நான் குடிச்சுப்போட்ட உழறி விட்டணெண்டு. நான் ஒரு தீர்மானத்துடன் தான்ரா உழறினனான். என்ரை பிள்ளைக்குப் பொம்பிளை இல்லையென்றே சொல்கிறாய். நடேசு.. உன்ரை மூத்தமகளை என்ரை பிள்ளைக்குக் கட்டித் தரமாட்டியே? தங்கச்சி பூமணி நீ தூக்கி வளர்த்த பிள்ளை அவன்.

அவனுக்குப் பெண் தரமாட்டினை என்று கனகரத்தினம் சொல்லுறான்.''

''காலமை பேசுவம் இப்ப வேண்டாம்'' என்றான் நடேசன்.

''இல்லை இப்ப உன்ரை முடிவைச் சொல்ல வேண்டும். சொல்லு. இல்லாட்டில் நான் உன்ரை வீட்டை விட்டு வெளிக்கிட்டுடுவன். எனக்கு வெறி இல்லை. இரண்டு போத்தல் பனங்கள் வெறிக்குமே..?''

சில மாதங்களாக நடேசன் குடிப்பதில்லை. குடிக்கமாட்டேன் என்று பூமணிக்குச் சத்தியம் பண்ணியிருந்தான்.

''துரை, நீ என்ரை உயிர் நண்பன். உனது இனத்தவர்கள் பலர் இருக்க என்னைத் தேடி வந்தனி. உனக்காக நான் என்ரை உயிரையும் குடுப்பன், மகளைத் தரமாட்டனே'' சின்னத்துரையின் கையைப் பிடித்தான் நடேசன்.

''தங்கச்சி நீ என்ன செல்கிறாய்?''

''அவற்ரை முடிவு தான் என்ரை முடிவு. இது உங்களுக்குத் தெரியாதே.'' என்றாள் பூமணி.

''இப்ப நான் உண்மையைச் சொல்லப் போறன். என்ரை பிள்ளைகள் எல்லாமாய்ச் சேர்த்து நடேசன்ரை

மகளைத் தான் இளையவனுக்குச் செய்யிறதெண்டு முடிவெடுத்தவை. நான் எல்லோரையும் சோதித்துப் பார்த்தனான். என்ரை மகனைச் செய்யப் பலர் விரும்பியவை. விசர் என்று சொன்னவுடனை எல்லாரும் மறுத்திட்டினை. நடேசன் மட்டும் என்ரை நட்பை விடக் கூடாதென்பதற்காக விசயம் தெரிந்தும் ஒப்புக் கொண்டவன். இது தான்ரா நட்பு. என்ரை மகனுக்கு எந்த வருத்தமும் இல்லை. என்ரை பிள்ளைகள் எல்லோருமாய்ச் சேர்ந்து நடேசனுக்கு உதவ முடிவு செய்து இளையவனுக்குப் பிரான்சில் ஒரு வீடு வாங்கிக் கொடுத்துள்ளனர். கலியாணம் முடிய நடேசனும் பூமணியும் பிரான்சிலை இருப்பினை. பூமணி உன்ரை சத்தியத்தை இண்டைக்கு விட்டுக் குடு. இரண்டு பேரும் குடிக்க வேண்டும்'' என்றார் சின்னத்துரை. பூமணி பூரிப்புடன் சிரித்தாள்.

# பந்திக்கு முந்து

பகீரதி பிள்ளையார் கோயிலுக்கு வந்தபோது அங்கு சிலர் பிள்ளையாரை வணங்கிக் கொண்டிருந்தனர். அன்று ஆவணிச் சதுர்த்தி. பகீரதி ஒவ்வொரு மாதமும் வரும் சதுர்த்திக்கு விரதம் அனுட்டிப்பாள். சதுர்த்தி அன்று அவள் பூசை தொடங்கு முன்பே வந்துவிடுவாள். தனிமையாக இருந்து வணங்குவதே அவளுக்குப் பிடிக்கும். அடியார்கள் சிலர் கோயிலைக் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தனர்.

ரகுநாதன் பகீரதியைத் தரிசிப்பதற்காக ஒவ்வொரு சதுர்த்தி தினத்திலும் வந்து கோயிலைக் கூட்டித் துப்பரவு செய்வது போல அவளின் அழகை ரசிப்பான். அவள், அவன் இருக்கும் வீதியில் தான் வசிக்கிறாள். பட்டதாரிப் பயிலுனர். அவனும் பட்டதாரிப்பயிலுனர் தான். இருவரும் வெவ்வேறு அலுவலகங்களில் பணிபுரிகின்றனர்.

ரகுநாதன் தன்னைச் சுற்றி சுற்றி வருவது அவளுக்குத் தெரியும். அதனைப் பெரிதாக அவள் எடுப்பதில்லை. ஆண்கள் இலகுவில் காதல் வயப்பட்டுவிடுவர். முதலில் அவர்களுக்கு வேண்டியது ஒரு பெண்ணுடன் கதைப்பது. அதில் அவர்கள் பெரும் இன்பமடைவார்கள். அதன் பின் சுற்றித் திரிந்து இன்பமடைவர். அதன் பின் சந்தர்ப்பவசத்தால் பெண்கள் சிரித்துவிட்டால் கதைக்கத் தொடங்குவர். அதன் பின் கற்பனைக் கதைகளை அளவுக்கதிகமாகப் பேசுவர். பெண்கள் ஆனந்தத்தில் மெய் மறந்திருந்தால் தமது திருவிளையாடல்களைத் தொடங்கிவிடுவர். இது பகீரதிக்குத் தெரியும். அவளோடு படித்தவள் உமாதேவி. அவள் அருகில் உள்ள இனத்தவன் ஒருவனோடு காதல் கொண்டு அவனோடு சுற்றித் திரிந்தவள். அவன் அவளது வீட்டிற்கு ஆட்கள் இல்லாத சமயம் சென்று வருவான்.

இப்படி இருக்கும் நாளில் அவனது வெளிநாட்டில் இருக்கும் சகோதரர்கள் அவனையும் அவர்கள் வாழும் நாட்டிற்கு அழைத்தனர். ஆயிரம் கதைகள் கூறி நம்பிக்கையூட்டி விட்டுச் சென்ற அவன், சென்ற பின் அவளுடன்தொடர்பு கொள்ளவில்லை. பெற்றோர் நல்ல பணக்கார இடத்தில் பெண்ணைப் பேசி அவன் வாழும் நாட்டிற்கு அனுப்பி வைத்தனர். அதிலிருந்து பகீரதி காதலில் நம்பிக்கையில்லாதவளாகவே இருந்தாள்.

அவள் அன்று கோயிலுக்கு வரு முன்பே ரகுநாதன் கோயிலுக்கு வந்திருந்தான். அவள் அன்று நீலநிறச் சேலை

அணிந்திருந்தாள். அதைத் திரும்பத் திரும்ப பார்க்க வேண்டும் என்ற உணர்வு ரகுநாதனின் மனதில் எழுந்தது. அவள் கவனிக்காத போது முழுமையாகப் பார்த்தான்.

ஏனைய நாட்களை விட அன்று அவன் அடிக்கடி தன்னைப் பார்ப்பதை உணர்ந்து கொண்ட பகீரதி என்ன செய்யலாமென்று யோசித்தாள்.

அவளது நண்பியான வதனாவுக்கு ரகுநாதனைத் தெரியும். அத்துடன் வதனா தனது அனுபவங்களை அடிக்கடி கூறுவாள். அவளுடன் பகீரதி வரும்போது அவன் பார்க்கும் பார்வையின் அர்த்தத்தையும் தெரிந்து கொண்டாள். அவள் காதலித்துத் திருமணம் செய்தவள். அவள் காதலிக்கும் போது சில நிமிடங்கள் கூடப் பிரிந்திருக்க முடியவில்லையென்று கான்போனில் கூறிய சபேசன் இப்போ அருகில் இருந்தாலே கவனிக்கிறானில்லை.

அவன் கச்சேரியில் திட்டமிடல் பகுதியில் வேலை செய்வதால் வீட்டுக்கு வந்தநேரம் தொடக்கம் இரவு பத்து மணிவரை கணணியுடன் இருப்பான். அதன் பின் எழுந்து வந்து இரவு உணவை உண்ட பின்பு உறங்கிவிடுவான். முக்கியமான செய்திகளைக் கூட மனம் விட்டுப் பேசமுடியாது அவள் தவிப்பாள். காலையில் எழுந்தவுடன் பேசலாமென்றால் நான்குமணிக்கே எழுந்து கணணிக்கு முன்னால் அமர்ந்துவிடுவான். ஏழரைக்குப் பிறகு எழுந்து அவசரப்பட்டுச் சில சமயங்களில் காலைச் சாப்பாட்டையும் கட்டிக் கொண்டு போய்விடுவான்.

‘‘காதலிக்கும் காலங்களில் தான் காதலர்கள் இன்பமாகப் பேசலாம். பழகலாம். காதலித்துத் திருமணம் செய்துவிட்டால் கணவர்மாரைக் காண்பதே அபூர்வம். ரகுநாதன் உன்னைக் காதலிகிறான். ஆனால் அதைச் சொல்லப் பயப்படுகிறான். பெரும்பாலான ஆண்கள் தம் காதலை வெளிப்படுத்தத் தயங்குவர். அதற்குப் பல காரணங்கள் உண்டு. தற்செயலாகப் பெண்கள் சண்டைக்கும் போவார்கள். குடும்பத்தவரிடம் சொல்லிவிடுவார்கள். அதனால் பெரும் பிரச்சினைகள் வரலாம். அதற்காகத் தான் அவர்கள் தமது காதலை வெளிப்படுத்தப் பெண்களைச் சுற்றிச்சுற்றி வருவார்கள். பெண்கள் பார்க்காத போது பார்த்து ரசிப்பார்கள். உன்னை ரகுநாதன் காதலிக்கிறான். அதை அவன் தனது செயல்களால் வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கிறான். உனக்கு அவனைத் திருமணம் செய்ய விருப்பமானால் உனது எண்ணத்தை வெளிப்படுத்து. விருப்பத்தை வாயால் சொல்லித் தான் வெளிப்படுத்த வேண்டுமென்றில்லை. குறிப்பாலும் வெளிப்படுத்தலாம்’’

பகீரதி அதைக் கேட்டுச் சிரிப்பாளே தவிரப் பதில் சொல்லமாட்டாள்.

‘‘நான் அவருக்கு எனது பின்னலால் தான் வெளிப்படுத்தினேன். பின்னலைத் தூக்கி மார்புக்கு மேல் போட்டேன். பின் அதைப் பின்னுக்குப் போட்டேன். மூன்று முறை போட்ட பின்பு அவர் எனக்கருகில் வந்தார். அப்போதும் பின்னல் தான் உதவியது. பின்னலைத் தூக்கி

முன்னே போட அவர் சிரித்தார். பின்பு; ‘‘நல்ல அழகான சேலை என்றர். அது தான் முதல் கதை. அது மாதிரி நீ ஏதாவது செய்’’ என்றாள்.

அதற்கும் பகீரதி எதுவும் கூறவில்லை; ‘‘ஒன்றில் நீ துணிய வேண்டும். இல்லாவிட்டால் ரகுநாதன் துணிய வேண்டும். நிலைமையப் பார்த்தால் அவன் துணியமாட்டான். அவனுடன் எனது தங்கை படித்தவள். அவளுக்குச் சொன்ன போது அவள் சொன்னாள்; ‘‘ரகு ஒரு வெக்கறை. பெண்களை நிமிர்ந்தே பார்க்கமாட்டார். கதைத்தாலும் கதைக்கமாட்டார். நாங்கள் வகுப்பில் அவரைச் சீண்டுவோம். பயத்தால் நடுங்குவார். வேர்த்துக் கொட்டும். அதனால் பகீரதி தான் அவரைத் தூக்கிச் செல்ல வேண்டும்.’’ என்றவள். நீயும் கிட்டத்தட்ட அதே நிலை தான். நண்பிகள் உதவலாமே தவிர வேறு எதைச் செய்ய முடியும்.’’ என்றாள் வதனா.

ஒருவாறு மனத்திடங் கொண்ட பகீரதி அன்று கோயிலில் கூட்டிக் கொண்டு நின்ற ரகுநாதன் அருகில் சென்றாள். மனம் படபடத்தது. எனினும் தடுமாறியபடி; ‘‘தும்புத்தடியைத் தாருங்கள் நான் கூட்டுகிறேன்’’ என்றாள்.

ரகுநாதன் நிமிர்ந்து பார்த்தான். அவளின் அருகே வதனா நின்று சிரித்தாள். ரகுநாதனின் உடல் லேசாக நடுங்கியது. நிமிர்ந்து பார்த்தவன் கலவரத்தடன் மிரளமிரள விழித்தபடி தும்புத்தடியைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

‘‘பகீரதிக்கு ஏமாற்றமாகவும் வெட்கமாகவும் இருந்தது. அருகில் நின்ற வதனாவைப் பார்த்தாள்; ‘‘தும்புத்தடியை வாங்கினனி கூட்டு. இவனோடு கதைக்க முடியாது. கடத்திக் கொண்டு தான் போக வேண்டும். அதற்கான முயற்சியை எடுப்போம்’’ என்றாள் வதனா.

பகீரதியின் கண்கள் அவனைத் தேடின. சுற்றி வரப் பார்த்தாள். காணவில்லை. கூட்டவும் மனமில்லாது இருந்தது. தும்புத்தடிகளை வைக்கும் அறைப்பக்கம் ரகுநாதனின் குரல் கேட்டது.

‘‘எனக்குப் பயமாக இருக்குதடா. வதனாவும் அருகில் நின்றாள். நான் ஏதாவது கதைத்திருக்கலாம். ஆனால் கதைக்க முடியவில்லை. நான் கதைத்தால் தற்செயலாக அவள் தவறாகப் புரிந்த கொண்டால்…’’ என்று ரகுநாதன் கூறும் போது யாரோ ஒருவன் சொன்னான்; ‘‘தவறாக நினைத்தாலென்ன. பேசுவார்கள். இல்லாவிட்டால் முறைப்பார்கள். சோதி கல்பனாவைக் காதலிக்கும் போது அவளின் பின்னால் திரிந்தவன். அவனது தொல்லைகளைத் தாங்க முடியாத கல்பனா காலிலிருந்து செருப்பைக் கழட்டிக் காட்டியவள். அதன் பின்பும் அவளை அவன் சுற்றியதால் அவனை அவள் எச்சரித்தாள். அதன் பின்பும் அவன் சுற்றித் திரிந்தவன். ஆத்திரம் கொண்ட கல்பனா கண்டபடி ஏசினாள். அதற்குச் சோதி சொன்னான்; ‘‘நீங்கள் அன்பாகப் பேசுவீர்கள் என்று நினைத்தேன். ஆத்திரத்தில் கத்துகிறீர்கள். அதுவும் நல்லது தான். ஆத்திரம் ஒருநாள்

அன்பாக மாறும்’’ என்றான். அவன் சொன்னபடி சில நாட்களுள் கல்பனாவின் மனம் இளகிவிட்டது. இப்போ அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். பெண்கள் விருப்பமிருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது கோபமுள்ளவர்களைப் போல நடிப்பார்கள். அதனால் சோதியைப் போல அவளைப் பின்தொடர்ந்து போ பேசினால் சிரி’’

பகீரதிக்கு அதைக் கேட்க எரிச்சலாக இருந்தது; ‘‘பார்ப்போம் வெளியே வரட்டும்’’ எனக் காத்திருந்தாள்.

அவள் வெளியே இருக்கிறாள் என்பதை அறிந்த ரகுநாதன் வெளியே வரவில்லை.

பகீரதி வீட்டுக்கு வந்தாள். அவனது மாமன் அவளது பெற்றோருடன் கதைத்துக் கொண்டிருந்தார். அவர் தினமும் வந்திருந்து கதைப்பது வழக்கம். அதனால் அதை அவள் பெரிதுபடுத்தவில்லை.

வீட்டுக்கு வந்த ரகுநாதன் குழம்பிப் போனான். அவனது நண்பன் துரைராசா சொன்னது அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது; ‘‘பகீரதி, நீ கதைத்தால் பேசமாட்டாள். அவள் மிகவும் அமைதியானவள். கோயிலுக்கு வந்தால் உன்னையே பார்த்துக் கொண்டிருப்பாள். நீ அவளைப் பார்க்காததால் உனக்கு அது தெரியாது. நான் பல தடவைகள் அவதானித்து இருக்கிறேன். உன்னைப் பார்க்கும் போது

அவள் நாணப்படுகிறாள். மகிழ்ச்சியடைகிறாள். அதனால் நீ பேசு. பூசை தொடங்குவதற்கு வெகுநேரத்திற்கு முன்பே கோயிலுக்கு வருகிறாள். வேறு எந்தப் பெண்களும் அந்நேரம் வருவதில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? அவள் உன்னைப் பார்க்கத் தான் வருகிறாளென்று தெரியவில்லையா? அவள் வரும் நேரத்தில் யாரும் இருப்பதில்லை. அதனால் நீ அவளின் அருகே சென்று நீ கூற விரும்புவதைக் கூறிக் கொண்டு போ. அவள் அதைக் கடைசிவரையும் வெளியே சொல்லமாட்டாள். நாளைக்குக் கதை.''

''நாளைக்கு மாலைப்பூசைக்கு அவள் வந்தால் துரைராசா சொன்னது போல் அவளின் அருகே சென்று நடந்தபடி கதைக்க வேண்டும் என்று நினைத்து இரவு முழுவதும் திட்டமிட்டான்; ''நான் உன்னைக் காதலிக்கிறன். உனக்கு என்னில் விருப்பமா?'' என்று கதைத்துப் பார்த்தான். பலமுறை கதைத்துப் பார்த்தான். திருப்தியாக இருந்தது. அன்றைய இரவு நீண்டு கொண்டிருப்பதைப் போல இருந்தது. விடிந்துவிட்டது. அன்று அலுவலகத்திற்கு லீவுபோட்டு விட்டு வீட்டில் இருந்தான். துரைராசாவையும் வரச் சொல்லியிருந்தான். அவனும் வந்துவிட்டான்.

''துரை, இன்றைக்கு நான் நடுநடுங்கியபடியாவது மனதில் உள்ளதைச் சொல்லி விடுவேன். ஆரம்பத்தில் பயமாகத் தான் இருந்தது. இப்ப தைரியம் வந்துவிட்டது. அதனால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கு. வா சந்தியிலுள்ள

சாப்பாட்டுக் கடைக்குச் சென்று விசேட உணவு சாப்பிடுவோம்'' என்றான்.

''இல்லை. மாலைநேரம் அவள் கோயிலுக்கு வருவாள். வந்ததும் சொல்லிவிட்டு இரவு உணவு அருந்துவோம். நீ குடிப்பதில்லை. அதனால் எனக்குச் சாராயம் வாங்கித்தா'' என்றான் துரைராசா.

''சரி. உனது ஆலோசனையால் தான் எனக்குத் துணிவு வந்தது. உனக்கு நான் நாலைந்து நாட்களுக்குக் குடிப்பதற்குச் சாராயம் வாங்கித் தருகிறேன்'' என்றான் ரகுநாதன்.

படுக்கையில் நித்திரை வராமல் புரண்டு கொண்டிருந்தாள் பகீரதி. ஒருபக்கம் ரகுநாதனின் முகம். மறுபக்கம் தாயாரின் சொற்கள்; ''பிள்ளை, மாமாவின் மகனின் மனைவியினுடைய சொந்தக்காரன் மாமாவின் மகனின் கல்யாண வீடியோவைப் பார்த்து விட்டு உன்னைத் திருமணம் செய்ய விரும்புகிறானாம். அவனும் தாயும் ஊருக்கு வந்திருக்கினை. நாளைக் காலமை பத்துமணிக்கு உன்னைப் பெண் பார்க்க வருகிறார்களாம். அன்றைக்கே எழுத்தை முடித்துவிட்டால் மாப்பிளை கனடாவுக்குப் போகும்போது கல்யாண எழுத்துச் சேட்பிக்கற்ரைக் கொண்டு போனால் நாலைந்து மாதத்துக்குள் உன்னைக் கூப்பிடலாமாம். மாமா நல்ல இடம். மாப்பிளை நல்ல குணசாலி. நல்ல தொழில் பார்க்கிறார். அத்துடன் அவருக்குக் கனடாவிலை ஒரு வீடும் இருக்கு. அதனால்

எங்களுக்கு நல்ல விருப்பம் என்று சொன்னனான். நீ ஐந்தாறு வருடங்களாய் வெளிநாட்டு மாப்பிளையைத் தான் செய்ய விரும்பினனீ. அதனாலை கொப்பர் சம்மதித்திட்டார்.''

பகீரதியால் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க முடியவில்லை. ரகுநாதனின் நினைவு தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது. அதனால் நடந்த சம்பவத்தைப் பற்றி வதனாவுக்குச் சொன்னாள்.

வெகுநேரத்தின் பின் வதனா போன் பண்ணினாள்; ``அவர் இன்றைக்கு நேரத்துடன் வந்துவிட்டார். அத்துடன் கணணி வேலையும் இல்லை. அதனால் அவரைக் கொஞ்சம் கவனிக்க வேண்டியதாயிற்று. நீ கனடா மாப்பிளையைச் செய்யிறது தான் நல்லது. ரகுநாதனைப் பற்றி தீர்க்கமான முடிவை எடுக்க முடியாது. சில சமயம் அவன் தான் விரும்பவில்லை என்று சொன்னால் பிரச்சினை. நீ அவனைக் காதலிக்கவில்லை. அவனும் காதலிக்கவில்லை. நான் ஒரு ஊகத்தில் சொன்னேன். சொல்லிப் பல நாளாகியும் நீ அவனோடு கதைக்கவில்லை. அத்துடன் குறிப்பால் கூட உணர்த்தவில்லை. இந்நிலையில் அவனை நம்புவது முட்டாள்த்தனம். உனக்கு வெளிநாடு செல்லத் தானே விருப்பம். அதனால் தேடிவரும் வாய்ப்பை இழந்துவிடாதே. சரி பிறகு தேவையென்றால் போனில் சொல்லு'' என்று கூறிவிட்டுப் பதிலுக்குக் கூடக் காத்திராது போனைக் கட்பண்ணினாள் வதனா.

விடியும் வரை பகீரதியால் முடிவெடுக்க முடியவில்லை. விடியற்புறம் மாப்பிளையின் தாயாரும் மாமனும் பகீரதியின் வீட்டுக்கு வந்துவிட்டனர். பகீரதியின் தாய் விடியும்வரை திருமண ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாள்.

அன்று மாலை ரகுநாதன் மாப்பிளை போலத் தன்னை அலங்கரித்துக் கொண்டு பிள்ளையார் கோவிலுக்கு வந்தான். துரைராசா வரவில்லை. வெகுநேரமாயும் வரவில்லை. பூசை தொடங்கிவிட்டது. ஆனால் பகீரதி வரவில்லை. பூசைக்கு வந்த பெண் ஒருத்தி ரகுநாதனின் அருகில் வந்து சொன்னாள்; ‘‘தம்பீ, பிள்ளையாருக்குத் தொண்டு செய்தால் அவர் செய்பவர்களுக்கு நல்வாழ்வு கொடுப்பார். செல்வநாயகத்தின் மகள் பகீரதி தான் வெளிநாட்டு மாப்பிளையைத் திருமணம் செய்ய வேண்டுமென்று நினைத்துக் கோவிலுக்கு வந்தாள். இன்றைக்குக் காலைமை அவளுக்கும் கனடா மாப்பிளைக்கும் எழுத்து நடந்தது. மாப்பிளை நல்ல வாட்டசாட்டமான ஆள். அவருக்குக் கனடாவில் வீடும் இருக்காம். கொடுத்து வைத்தவள். அடுத்து உனக்குத் தான் பிள்ளையார் கலியாணம் கட்டிவைப்பார்’’

ரகுநாதனுக்குத் தலை சுற்றியது. நிலத்தில் அமர்ந்தான். அவனால் சிந்திக்க முடியவில்லை; ‘‘பகீரதி என்னை விரும்பவில்லை. நல்ல காலம் நான் கேட்டிருந்தால் அவமானப்பட்டிருப்பன்’’ என்று நினைத்தான் ரகுநாதன்.

அப்போது அங்கு வந்த துரைராசா சொன்னான்; ‘‘வரேக்கை வழியிலை வதனாவைக் கண்டனான். அவள் உன்னைத் தானாம் விரும்பினவள். கேட்கப் பயத்திலை கேட்கவில்லையாம். நீ கேட்டிருந்தால் சம்மதித்திருப்பாளாம். இரவு பத்து மணிக்குத் தானாம் கலியாணம் முற்றானது. தனக்கு இரவு எட்டுமணி வரை எதுவும் தெரியாது என்று வதனாவுக்கு ரெலிபோனில் சொன்னவளாம். தான் தான் வற்புறுத்திச் செய்யச் சொன்னதாகச் சொன்னாள். உன்ரை விருப்பத்தைத் தன்னிடம் சொல்லியிருந்தாலாவது தான் சொல்லியிருப்பன் என்றாள்.’’

அதைக் கேட்ட ரகுநாதனுக்குக் கவலையாக இருந்தது; ‘‘நல்லதோ கெட்டதோ மனதில் தோன்றியதை உடனே சொல்லிவிடல் வேண்டும். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை’’ என நினைத்தான் ரகுநாதன்.

‘‘காதலில் வெற்றியடைய வேண்டுமானால் துணிவு வேண்டும். நம்பிக்கை வேண்டும். துணிந்தவர்கள் பெரும் அவமானத்திற்குள்ளான போதும் காதலில் வெற்றியடைந்துள்ளனர்.’’ என்றான் துரைராசா

# வழிகாட்டி

பொன்னம்பலம் ஓய்வு பெற்ற அதிபர். மிகவும் நேர்மையானவர்; கண்டிப்பானவர்; அன்புள்ளம் கொண்டவர்; கடமை தவறாதவர்; மக்களுக்கு உதவி செய்பவர். அவருக்குச் சோதிடம் தெரியும்; வேதங்களின் உட்பொருள் தெரியும்; புராண இதிகாசங்கள் தெரியும். அதை விடப் பழம் தமிழ்நூல்கள் அனைத்தின் உட்பொருளும் தெரியும். சமய தத்துவநூல்களின் பொருளும் உட்பொருளும் தெரியும்.

அவர் அதிபராகப் பணிபுரிந்த காலத்தில் தன்னை அர்ப்பணித்தே தனது கடமைகள் அனைத்தையும் செய்தார். அவர் கற்ற பாடசாலை அது. அவர் அதிபராகப் பொறுப்பேற்ற போது நூற்றுக்கும் குறைவான மாணவர்கள் தான் கல்வி கற்றனர். அவர் பொறுப்பேற்ற பின்பு படிப்படியாக அப் பாடசாலை வளர்ச்சியடைந்து, அவர் ஓய்வு பெறும்போது உச்ச வளர்ச்சியை அடைந்தது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் இருபத்தைந்திற்கும் அதிகமான மாணவர்கள் சித்தியடைவர். வீதியோரத்தில் இருந்த அப் பாடசாலை ஒரு திறந்த வெளியரங்காகவே இருந்தது. அதனால் போவோர் வருவோரெல்லாம் தங்கிச் சென்றனர்.

இரவுவேளைகளில் மதுப்பிரியர்களின் மண்டபமாக அது இருந்தது.

பொன்னம்பலம் பாடசாலையைப் பொறுப்பேற்றவுடன் முதலில் வேலியடைத்தார். பின் கிண்றறைத் துப்பரவு செய்தார். சட்டதிட்டங்களை உருவாக்கினார். பாடசாலை மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்தது.

அதன் பின் சுற்றுமதில் கட்டப்பட்டது. நீர்த்தாங்கி அமைக்கப்பட்டது. கணணிக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. பாடசாலையின் ஸ்தாபகரின் சிலை வைக்கப்பட்டது. கோவில் கட்டப்பட்டது. விளையாட்டு மைதானம் வாங்கப்பட்டது. பாடசாலையின் வளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்த போதும் பொன்னம்பலம் வளரவில்லை. கலைப்பட்டதாரியான அவரின் ஒழுக்கமே அதற்குக் காரணம்.

அவர் அதிகாரிகளைப் போற்றித் துதிப்பதில்லை. அவர்களுக்குச் சேவகம் செய்வதில்லை. தனது கடமைகளை மிகமிக நேர்த்தியாகச் செய்வார். அதிகாரிகளின் நெருங்கிய உறவினர்களும் நண்பர்கள் பலரும் அதிகாரிகளைச் சந்தித்துப் புகழ்ந்து பேசப் பொன்னம்பலம் பாடசாலையில் மேலதிக வகுப்புக்களை வைத்து நடத்திக் கொண்டிருப்பார்.

‘‘நான் எனது கடமையைச் செய்கிறேன். அதற்காக எனக்குச் சம்பளம் வழங்கப்படுகிறது. சலுகைகள் பல பெறுகிறேன். அறுபது வயதிற்குப் பின்பு ஓய்வூதியம்

கிடைக்கும். நான் இறந்துவிட்டால் மனைவியும் குடும்பமும் பாதிப்பில்லாமல் இருக்க எனது ஓய்வூதியத்தை எந்தக் கழிவும் இல்லாமல் அப்படியே அரசாங்கம் கொடுக்கும். இவ்வளவு சலுகைகளையும் பெற்றுவிட்டு நான் சேவை செய்தேன் என்று எப்படிச் சொல்வது? உங்கள் வீட்டுவேலைகளைச் செய்பவனை நீங்கள் சேவையாளன் என்றா சொல்கிறீர்கள்?'' என்று கேட்பார்.

அதனால் அவருடன் மரியாதையாக நடந்து கொள்வோரும் அவரைப் புகழ்வதில்லை. ஓய்வுபெற்ற பின் அவர் தனது வீட்டில் ஏற்கனவே அமைக்கப் பெற்ற வைரவர் கோவிலில் இருப்பார். அவரைச் சந்திக்க விரும்புவோர் அங்கு சென்று தான் சந்திக்க வேண்டும். வைரவர் கோவிலின் பின்புறத்தில் பெரியதொரு வேப்பமரம் நிற்கிறது. அது வைரவர் கோவிலைத் தாண்டி பரந்திருந்தமையால் அவரைச் சந்திக்க வருபவர்கள் அம் மரநிழலில் இருப்பர்.

கற்றவர்களுக்கு ஏற்படும் ஐயங்களை அவர் தீர்த்து வைப்பார். ஊரில் உள்ளவர்களுக்குச் சாதகப் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்து வைப்பார். முகூர்த்தநாள் நேரம் முதலியவற்றைக் குறித்துக் கொடுப்பார். ஆலோசனைகள் வழங்குவார்.

அன்று காலை அவர் பூசையை முடித்துவிட்டு வந்து வேப்பமர நிழலில் அமர்ந்த போது ஆரூரன் வந்தான். அவன் அவர் கற்பித்த பாடசாலையில் பீயோனாக வேலை செய்கிறான். அவர் ஓய்வுபெற்ற பின்பு தான் அவன்

நியமிக்கப்பட்டான். அவர் கடமையாற்றிய காலம் போர் நடைபெற்றது. மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்து வந்து அவர் வாழ்ந்த கிராமத்தில் குடியேறினர். நாநூறு பிள்ளைகள் கற்ற அந்தப் பாடசாலையில் எண்நூறு பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர்.

‘‘என்னால் உங்கள் பிள்ளைகளுக்கு முழுமையான கல்வியை வழங்க முடியுமே தவிர வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது. காலப்போக்கில் செய்வேன். இப்போ போதிய தளபாடங்கள் இல்லை; ஆசிரியர்கள் இல்லை; கற்பித்தல் உபகரணங்கள் இல்லை. நிலத்தின் கீழ் இருந்து தான் கற்க வேண்டும். அருகில் பெரிய பாடசாலை இருக்கிறது. நீங்கள் உங்கள் பிள்ளைகளை அங்கே சேர்க்கலாம்’’ என்பார்.

அதற்குப் பெற்றோர் உடன்படமாட்டார்கள். அதனால் அவர் ஊர்ப் பிரமுகர்களின் துணையுடன் வசதிகளைப் படிப்படியாக உருவாக்குவார். அப்படி நிலத்தில் இருந்து கற்ற பல மாணவர்கள் இன்று பெரிய பெரிய உத்தியோகங்களில் இருக்கிறார்கள். அவர் ஓய்வுபெறும் வரை போர் ஓயவில்லை. அறுநூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் கற்ற அப் பாடசாலையில் பதினைந்து ஆசிரியர்கள் மட்டுமே அரசஊதியம் பெறுவோர். ஏனைய பதினைந்து பேர் தொண்டர்கள். அவர் ஓய்வுபெற்ற பின் பீயோன்கள் இருவர். எழுதுவினைஞர்கள், காவலாளிகள் எனப் பலர் நியமனம் பெற்றனர். அவர்களில் ஒருவன் தான் ஆரூரன். அவன் பலமுறை வந்து அவரைச் சந்தித்துள்ளான்.

“ஐயா, எனக்கு வீட்டில் திருமணம் பேசுகிறார்கள். அது உங்களுக்குத் தெரியும். ஆனால் நான் ஒரு பெண்ணை விரும்புகிறேன். ஆனால் அவள் என்னை விரும்பவில்லை. தமது குடும்பத் தகுதிக்கு எனது வேலை சமமாகாதாம். கடைசி ஒரு பட்டதாரியைத் தான் திருமணம் செய்வேன் என்கிறாள். என்னால் அவளைப் பிரிந்து வாழமுடியாது” அழுதான் ஆரூரன்.

“அதற்காக அழுதால் பிரச்சினை தீர்ந்துவிடுமா..? அவளின் விருப்பத்தைப் பூர்த்திசெய். அது பெரிய வேலையல்ல” என்றார் பொன்னம்பலம்.

“என்ன ஐயா அப்படிச் சொல்கிறீர்கள். பட்டதாரியாக வேண்டுமானால் படிக்க வேண்டும்.” என்று ஆரூரன் கூறும் போது பொன்னம்பலம் இடைமறித்துச் சொன்னார்; “ஒன்றை அடைய வேண்டுமானால் நீ அதாக வேண்டும். அதாவது பட்டதாரியாதல் வேண்டும். நீ ஓ.எல் படித்தனி. இப்போ ஓ. எல்லுடன் பட்டப்படிப்புப் படிக்கலாம். அதனால் படி. முடிந்தால் ஏ.எல் பரீட்சையயையும் எடு. இப்போ தனியார் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். தேவையான உதவிகளை நான் செய்கிறேன். அத்துடன் உனது பெற்றோருடனும் கதைக்கிறேன்” என்றார்.

ஒருவருடம் கழிந்தது. ஆரூரன் ஏ.எல் பரீட்சை எடுத்து அதில் சித்தியடைந்த பெறுபேற்றுப்பத்திரத்துடன் அங்கு வந்தான்; “மிகவும் மகிழ்ச்சி. தொடர்ந்து படி உனது

எண்ணம் நிறைவேறும். அதை விட்டுவிட்டு அழுது புலம்புவதால் எதுவும் நடைபெறாது. முயற்சி திருவினையாக்கும்’’ என்றார் பொன்னம்பலம்.

அன்று மாலை உதயகுமார் என்ற ஆசிரியர் மிகுந்த மனவேதனையுடன் வந்தார்; ‘‘ஐயா, நான் திருமணம் செய்து இரு வருடங்கள். ஆறுமாதக் குழந்தை ஒன்றிருக்கு. என்னை நெடுந்தீவுக்கு இடமாற்றம் செய்துவிட்டார்கள். குடும்பத்தினரை என்ன செய்வது? குடும்பத்தை விட்டுப் பிரிய முடியாது. அதனால் வேலையை விட்டுவிட யோசிக்கிறேன்’’ என்று கலங்கினான் உதயகுமார்.

‘‘மகனே, ஆராயாது முடிவெடுக்காதே. நீ படித்தவன். பட்டம் பெற்றவன். அத்துடன் திறமையான ஆசிரியன். அதனால் உனது இடமாற்றக் காலத்தை உனது முன்னேற்றத்துக்குப் பயன்படுத்து. குடும்பத்தோடு நெடுந்தீவுக்குச் செல். அங்கு உனக்கு நிறைய நேரமிருக்கும். அதனால் தொடர்ந்து படி. ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுது. நீ பெரிதும் மதிக்கப்படுவாய். அத்துடன் உனது சாதகப்படி நீ பெரிய பதவியை அடைய வேண்டும். அதற்கு இவ் இடமாற்றம் கட்டாயம் உதவி செய்யும். அதனால் அங்கு செல்வது தான் சிறந்தது’’

உதயகுமார் மறுப்பேதும் சொல்லாமல் சென்றுவிட்டான்.

அன்று வெள்ளிக்கிழமை. மாலை நேரப் பூசையைக் காண்பதற்காகப் பலர் வந்திருந்தனர். பூசை முடிந்ததும் அடியவர்கள் வேப்பமர நிழலில் அமர்ந்திருந்தனர். பக்தர்கள் தமது குறைநிறைகளைப் பொன்னம்பலத்திற்குக் கூறுவர். பொன்னப்பலம் தான் பேசும் போது அவற்றிற்கான விடையைக் கூறுவார்.

அன்று நூற்றுக்கு மேற்பட்ட அடியவர்கள் கூடியிருந்தனர்; ''அன்பானவர்களே, இன்று நான் உங்களுக்குக் கடவுளைப் பற்றிக் கூறப்போகிறேன். கடவுளைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என்று நினைப்பீர்கள். இவர் ஏன் தெரிந்தவற்றைக் கூறுகிறார் என்றும் நினைப்பீர்கள். கடவுளைப் பற்றி உங்களுக்குத் தெரியும். ஆனால் தெரியாது'' என்று கூறியவர் சில கணங்கள் பேச்சை நிறுத்திவிட்டுச் சபையைப் பார்த்தார். அனைவரும் திகிலடைந்தவர்களைப் போல இருந்தனர்.

''அன்பானவர்களே, உங்களுக்குக் கடவுளைப் பற்றி முழுமையாகத் தெரிந்திருந்தால் நம்பிக்கை யீனப்படமாட்டீர்கள். தற்போது எமது கிராம மக்களிடம் பேய்பிசாசு, பில்லிசூனியம் பற்றிய நம்பிக்கை கடவுளின் மேலுள்ள நம்பிக்கையை விட வலுத்துள்ளது. கடவுளை நம்புபவர்கள், கடவுள் எல்லோரையும் காப்பாற்றுவார் என்று நினைப்பவர்கள், கடவுளை யாரலும் கட்டுப்படுத்த முடியாது என்று நினைப்பவர்கள் பேய்பிசாசு, பில்லிசூனியத்தை நம்பமாட்டார்கள். கடவுளை வணங்குபவனுக்கு எதனாலும் ஆபத்து வராது என்று நம்புபவன் ஒருபோதும்

துன்பப்படமாட்டான். நோய் வந்தால் வைத்தியரிடம் செல்லுங்கள். உரிய மருந்தைப் பெறுங்கள். காலம் தவறாது உண்ணுங்கள். கடவுளை வணங்குங்கள். உங்களது நோய் சுகமாகும்''

''நேற்று ஒருவர் வந்து தனது மகனுக்குச் செய்வினை செய்துவிட்டார்களென்றும் அதனால் அவன் படிக்கிறானில்லையென்றும் அவன் விசரர் போல அலட்டுகிறானென்றும் சொன்னார். நான் அவரது மகனை அவர் அறியாமல் ஆராயும்படி எனது மாணவர்களுக்குச் சொன்னேன். அவன் தீய நண்பர்களுடன் சேர்ந்து தீயபழக்கங்கள் பலவற்றைப் பழகிவிட்டான். கஞ்சாவைப் புகைப்பதால் அவனுக்கு இந்த நிலை உண்டானது. இப்போ இனந்தெரியாத பலர் பிளைப்புக்காகக் கஞ்சாவை விற்கின்றனர். அதனால் மிகவும் அவதானமாக இருங்கள்''

''கடவுள் நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காகத் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்வார். அவரது சின்னங்களை அணிபவர்களைப் பேய் பிசாசுகள் அணுகாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கடவுளின் நினைப்போடு செயற்படுபவனை யாராலும் எதுவும் செய்துவிட முடியாது என்பதை நம்புபவர்கள் தான் கடவுளைப் பற்றித் தெரிந்தவர்கள்'' என்றார் பொன்னப்பலம்.

மறுநாள்க்காலை ஆரூரன் விரும்பிய தர்சிகா என்ற பெண் பொன்னம்பலத்திடம் வந்தாள்.

‘‘மகளே, உனக்கு ஆரூரன் மீது காதல் இருப்பதைக் கூறி அவனைப் படிக்கும்படி கூறச் சொன்னாய். அது வெற்றியளித்துள்ளது. அதனால் நீ அவனுடன் கதைக்காதே. மீறிக் கதைத்தால் முன்பு போலப் பட்டதாரியாகிய பின் வா என்று சொல்’’ என்றார்.

அவள் சென்றதும் மணியமும் அவனது மகன் செந்தூரனும் வந்தனர். செந்தூரனின் முகம் கறுத்து வீங்கியிருந்தது.

‘‘ஐயா, எனது மகனைக் கெடுக்க யாரோ செய்வினை செய்துவிட்டார்கள் என்று நினைத்து அதை எடுக்கப் பல ஆயிரம்ரூபாக்களைச் செலவு செய்துவிட்டேன். நீங்கள் பெரிய மகான் அதனால் தான் உண்மைகளைக் கண்டறிந்து அவற்றை நீக்கினீர்கள். நன்றி ஐயா’’ என்று அவரின் கால்களைப் பற்றினான் மணியம்.

‘‘மகனே, செந்தூரா. மாணவப்பருவம் பெரும் சிக்கலான பருவம். அந்தப் பருவத்தில் நண்பர்களோடு சேர்ந்து வீரதீரச் செயல்களை மாணவர்கள் செய்வது வழக்கம். ஆனால் நீ தீயவர்களுடன் சேர்ந்து பழகக்கூடாத பழக்கத்தைப் பழகிவிட்டாய். போர்க்காலச் சூழலில் தீய செயல்களைச் செய்யப் பலர் முனைவர். படித்த நீ, படித்த கல்வியறிவைக் கொண்டு சிந்திக்க வேண்டும். ஏ.எல் பரீட்சை நெருங்கும் இவ்வேளையில் உனது தீயபழக்கத்தால் உனது வாழ்வைப் பழுதாக்க முனைந்ததோடு பெற்றோருக்கும் தீராத துன்பத்தை

ஏற்படுத்தினாய். இனியாவத திருந்தி கல்வியைத் தொடர். நீ கெட்டிக்காரன். கட்டாயம் பல்கலைக்கழகத்திற்குச் செல்வாய்'' என்றார் பொன்னம்பலம்.

ஆறுமாதம் சென்றது. உதயகுமார் மகிந்தவுடன் பொன்னம்பலத்திடம் வந்தான். அன்று பலர் அங்கிருந்தனர்.

''ஐயா, அன்று யோசிக்காது நான் முடிவெடுத்தேன். அது பிழையென்று சுட்டிக்காட்டி எனக்குச் சரியான ஆலோசனை வழங்கினீர்கள். நான் விஞ்ஞானப்பட்டதாரி. இதுவரை மேற்படிப்புப் பற்றிச் சிந்திக்கவில்லை. நீங்கள் சொன்ன பின்பு தான் சிந்தித்து நீங்கள் கூறியபடி நடந்தேன். மூன்று மாதங்களுக்கு முன்பு அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகமொன்று மேற்படிப்புக்கான புலமைப்பரிசில் விண்ணப்பம் கோரியது. அதில் நான் எழுதிய கட்டுரை ஒன்ற இணைக்கப்படல் வேண்டும். நான் அதை இணைத்து அனுப்பினேன். நேற்று நான் தேர்வு செய்யப்பட்டதாகவும் நான் எழுதிய கட்டுரை சம்பந்தப்பட்ட விடயத்தைத் தமது பல்கலைக்கழகத்திற்கு வந்து ஆராயும்படியும் கேட்டுள்ளது. இந்தாருங்கள் கடிதம்'' என்று நிட்டினான் உதயகுமார்.

''மகனே, எதையும் தீர ஆலோசிக்காது முடிவெடுப்பதால் தான் கற்றவர்கள் கூடப் பேதைகளாகின்றனர். ஒரு செயலை நன்கு ஆராய்ந்து முடிவெடுக்க முடியாவிட்டால் அத்துறை சார்ந்த நிபுணத்தவம் பெற்ற பெரியவர்களிடம் ஆலோசனை கேட்க

வேண்டுமெ தவிரத் தவறான முடிவு எடுக்கக்கூடாது'' என்றார் பொன்னம்பலம்.

''உண்மை தான் ஐயா, படித்தவர்கள் தமக்கு யாவும் தெரியும் என்று நினைப்பதால் தான் தவறான முடிவுகளை எடுக்கின்றனர். ஆனால் படிக்காதவர்கள் தமக்கு விளங்காதவற்றைத் தமக்குத் தெரிந்த நம்பிக்கையானவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர். அதனால் அவர்கள் வெற்றியும் அடைகின்றனர். உங்களது ஆலோசனை இல்லாவிட்டால் நானும் பாமரனாகி இருப்பேன். ஆசிரியர் என்பவர் உங்களைப் போலவே இருத்தல் வேண்டும். நீங்கள் ஆசிரியராகக் கடமை செய்யும் போது சிறந்த முறையில் கற்பித்ததனால் பல நல்ல மாணவர்கள் உருவாகியுள்ளனர். அதிபராகக் கடமையாற்றியதால் ஓர் ஆசிரியர் அதிபரான பின் எப்படிப் பாடசாலையை நடத்த வேண்டும் என்று நடத்திக் காட்டினீர்கள். ஓய்வுபெற்ற பின் சமூகம் எப்படி இருக்க வேண்டுமென்று அனைவர்க்கும் வழிகாட்டுகிறீர்கள். உங்களைப் போன்றதொரு ஆசானை நான் இதுவரை காணவில்லை'' என்றான் உதயகுமார்.

# தெளியாத மயக்கம்

சிவகுமார் காலையில் எழுந்தது முதல் இனம் புரியாத உணர்ச்சிக் குவியல்களுக் காட்பட்டிருந்தான். அவனால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. அவனது காதலியான வித்தியா ஐந்து தினங்களுக்கு முன் கொழும்பில் நடைபெறும் திருமணத்திற்குச் சென்றிருந்தாள். அவள் இன்று காலை ஊருக்குத் திரும்புவதாக ரெலிபோனில் கூறியிருந்தாள்.

வித்தியா பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி பயில்பவள். அவள் சிவகுமாரின் மீது உயிரையே வைத்திருந்தாள். தினமும் பல தடவை ரெலிபோனில் அழைப்பாள். சில சமயங்களில் நேரகாலம் தெரியாது கதைத்துக் கொண்டேயிருப்பாள். அது அவனுக்குச் சில சமயங்களில் எரிச்சலைக் கொடுக்கும். எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது அவளுக்குப் பதிலளித்தபடி இருப்பான். அவனின் குரல் மாற்றத்திலிருந்து அவனுக்கு ஏதோ அவசரவேலை இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் வித்தியா கதைப்பதை நிறுத்துவாள். அதன் பின் நாலைந்து மணித்தியாலங்களுக்கு அழைப்பிராது. பின் அது வழமைக்குத் திரும்பிவிடும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஞாயிற்றுக்கிழமையென்றால் சிவகுமாரின் நண்பர்கள் எல்லோரும் கூடிவிடுவார்கள். அன்றைய பொழுது மிகவும் உல்லாசமாகக் கழியும்.

சிவகுமார் ஏ.எல் படிக்கும் போது அவனுடன் கற்ற திவாகரன் என்ற மாணவ நண்பன் ஓ.எல் கற்று முடிந்ததும் மத்தியகிழக்கு நாடொன்றிற்குச் சென்று நன்றாக உழைத்துக் கொண்டு விடுமுறையின் போது ஊருக்கு வந்திருந்தான். அவன் சிவகுமாருக்கும் தனது நண்பர்கள் சிலருக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதியில் மதியஉணவு கொடுத்தான். அன்று நண்பர்கள் எல்லோரும் காலை ஒன்பது மணிக்கு ஒன்று கூடி ஒழுங்கு செய்யப்பட்ட விருந்தினர் விடுதிக்குச் சென்றனர்.

மேசையில் வெளிநாட்டுக் குடிவகைகள் இருந்தன. அதைச் சுற்றிப் பல வகையான தீன்பண்டங்கள், சிகரட்டுக்கள் இருந்தன. சிவகுமாரைத் தவிர மற்றவர்களெல்லாம் குடிப்பவர்கள். அதனால் சிவகுமார் திரும்பிச் செல்ல நினைத்தான்; "சிவா, நீ என்ன பட்டிக்காட்டான் போல இருக்கிறாய். பாட்டியென்றால் இதெல்லாம் இருக்கும். உனக்கு விருப்பமில்லாவிட்டால் கொக்காக்கோலா அல்லது ஸ்பிரைட்டைக் குடி. அதற்காக எம்மை அவமாகப்படுத்தாதை" என்றாள் திவாகரன்.

அவன் சொல்வது நியாயமாக இருந்தமையால் அவர்களுடன் சென்று அமர்ந்தான். நண்பர்களளெல்லோரும்

பெரு மகிழ்வுடன் குடிக்க ஆரம்பித்தனர். சிவகுமார் ஒரு கொக்காக்கோலாவை எடுத்து ஸ்ரோவை வைத்து மெல்ல உறுஞ்சினான்.

‘‘டேய் சிவா நித்தம் குடிப்பது தானடா தவறு. இப்படியான வேளைகளில் கொஞ்சம் குடிக்கலாம். நாங்களெல்லொரும் இரண்டு வருடங்களுக்குப் பிறகு இன்று சேர்ந்திருக்கின்றோம். இனி எப்போ சேர்வோமோ தெரியாது. வாழ்க்கையில் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும். ஆனால் கட்டுப்பாடு அவசியம். இப்படியான வேளைகளில் தான் நான் குடிப்பேன். ஒரு வருடத்திற்கு முன்னம் நண்பர்களோடு சேர்ந்து நான் குடித்தனான். அதற்குப் பிறகு இன்றைக்குத் தான் குடிக்கப் போறன். தினமும் பாருக்குச் சென்று வாங்கிக் குடிக்க முடியுமா? இன்று கொஞ்சமாய்க் குடி. இனிமேல் நாமென்ன சந்திக்கவா போகிறோம்?’’ என்றான் அரவிந்தன்.

‘‘அதுதானே. வாழ்க்கையை இரசித்துச் சுவைத்து அனுபவிக்க வேண்டும். அதுவும் இளைஞனாக இருக்கும் போது. பிறகு படித்து முடித்து வேலை தேடி அதன் பின் கலியாணம் செய்து குடும்பமாக வேண்டும். குடும்பமானால் குடிக்க வருமானம் போதாது. அதனால் அனுபவிக்க வேண்டியவற்றை இப்போதே அனுபவித்துவிடல் வேண்டும்’’ என்றான் திவாகரன்.

அரவிந்தன் ஒரு கொக்காக்கோலாப் போத்திலை எடுத்து அரைவாசியைக் கிளாசில் ஊற்றிவிட்டு அதற்குள்

சிறிதளவு சாராயத்தை விட்டுவிட்டுச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான். சிவகுமார் கதைப்பதில் கவனமாக இருந்த போது சிவகுமார் குடித்த கொக்காக்கோலாப் போத்தலை எடுத்துவிட்டு மதுபானம் கலந்த போத்திலை வைத்தான். அதை அவதானித்த திவாகரன் சொன்னான்; ‘‘சாராயம் தான் குடிக்கக்கூடாது கோலாவும் குடிக்கக் கூடாதே. குடியடா?’’ என்றான்.

‘‘இது பாட்டி. பல நாட்கள் பிரிந்திருந்த நாம் சந்திக்கிறோம். கோலாவையென்றாலும் எமக்காகக் குடிக்கக் கூடாதே. குடியடா. நீ குடியாமல் இருப்பது எமக்கு அவமானமாக இருக்கு’’ என்றான் அரவிந்தன்.

அதைக் கேட்டுச் சிரித்த சிவகுமார் போத்தலில் இருந்த கோலா முழுவதையும் ஒரே மூச்சில் குடித்தான். சிறிது நேரத்தில் உடல் முழுவதிலும் ஓர் இனம்புரியாத சிலிர்ப்புண்டானது. அந்தரத்தில் பறப்பதைப் போன்ற உணர்வு. இதுவரை அனுபவித்திராத ஒரு புத்துணர்வு உண்டானது; ‘‘இப்ப எப்படி இருக்கு?’’ என்று கேட்டான் அரவிந்தன். சிவகுமார் எதுவும் பேசவில்லை. சிரித்தான். சிரித்துக் கொண்டே இருந்தான்.

‘‘இன்னும் கொஞ்சம் குடியன்’’ என்ற கேட்டான் அரவிந்தன்.

‘‘கொஞ்சமாய்த்தா’’ என்றான் சிவகுமார்.

“போதும் போதும் கனக்க ஊத்தாதை. அவன் படிக்கிறான். காணும்” என்றான் அரவிந்தன்.

சிவகுமார் கிளாசில் உற்றியதைக் குடித்தவிட்டுக் கிளாசை மேசையில் வைத்த போது அவனது கையைப் பிடித்தார் ஒருவர். சிவகுமார் நிமிர்ந்து பார்த்தான். அவர் அவனது ஊரவர். அவனது தந்தை சம்பந்தனது நண்பர்.

“வா தம்பி ஒரு கதை” என்ற கூறிய ஊரவரான அருணாசலம் அவனைத் தனிமையான இடத்திற்கு அழைத்துச் சென்று இருத்திவிட்டுச் சொன்னார்; “சிவா, நான் உனது தந்தையின் உயிர் நண்பன். நானும் இளமையில் சேரக் கூடாதவர்களுடன் சேர்ந்து குடிக்கப்பழகி இன்றுவரை குடியை விட முடியாது துன்பப்பர்றன். உனக்கு இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள். உனது தந்தை கௌரவமானவர். மதிப்புள்ள ஒரு நல்ல ஆசிரியர். சரி இன்றைக்கு நண்பர்களுடன் சேர்ந்து குடித்துவிட்டாய். பரவாயில்லை. என்னைக் கண்டு பயப்படாதே. நான் யாருக்கும் சொல்லமாட்டன். ஆனால் இனிமேல் குடிக்காதை. ஏ.எல் படிக்கிறாய். இந்த ஆவணிக்கு ஏ.எல் எடுக்கிறாய். கவனமாகப் படி. பன்னிரண்டு வரிசம் கஷ்டப்பட்டதற்குப் பலன் கிடைக்கிற நேரத்திலை கெடுத்திடாதை. சரி போ” என்றார் அருணாசலம்.

சிவகுமார் நண்பர்களிடம் வந்த போது அவனது சேட் வியர்வையால் நனைந்திருந்தது.

“எனக்குச் சாப்பாடு வேண்டாம். நான் போகப் போறன். இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால் நான் வந்திருக்கமாட்டன்” கலங்கினான் சிவகுமார்.

“எங்களுக்குப் போதும். வா சாப்பிடுவம். இந்த நிலையில் நீ வெளியே போவது ஆபத்தானது. அருணா சலத்தைப் போல வேறு யாராவது கண்டால் கரைச்சல்” என்றான் திவாகரன்.

திவாகரன் சொல்வது சரியென நினைத்த சிவகுமார் அவர்களோடு சேர்ந்து உணவுண்டான். மாலை ஆறுமணிக்கு அவன் வீட்டுக்கு வந்தபோது அருணாசலம் வீட்டில் இருந்தார்.

“உனக்கு எத்தனை தரம் சொல்வது குடித்தால் இங்கு வரக்கூடாதென்று. சிறுவயதில் இருந்து ஒன்றாகப் படித்த பாவத்திற்காக உன்னோடு நட்பு வைத்திருக்கிறேன். பலமுறை சொல்லியும் கேட்கிறாயில்லை. அருணா, தயவுசெய்து இனிமேல் குடித்தால் இங்கு வராதே” கெஞ்சினார் சம்பந்தர்.

“நான் வரமாட்டன். நீ மத்தியானம் வீட்டை வந்து உடனடியாக ஐம்பதாயிரம்ரூபா தேவை என்று மனைவியிடம் சொன்னனியாம். அது தான் கொண்டு வந்தனான்” என்ற அருணாசலம் தான் கொண்டு வந்த பணத்தை மேசையில் வைத்து விட்டு அவரின் பதிலை எதிர்பாராது சென்றுவிட்டார்.

இனிமேல் குடிக்கக்கூடாது என்று தீர்மானித்த சிவகுமார் அன்றிலிருந்து ஏ.எல் பரீட்சை முடியும் வரை குடிக்கவில்லை. பரீட்சை முடிந்ததும் அவனது நண்பர்கள் எல்லோரும் நகரை ஆனந்தமாகச் சுற்றிப் பார்ப்போமெனப் புறப்பட்டனர். சிவகுமாரும் அவர்களுடன் இணைத்து கொண்டான்.

அவர்கள் நகரின் ஒதுக்குப் புறமான ஒரு வீட்டுக்கு வந்தனர். அவர்களுடன் சிவகுமாரும் வந்தான்.

‘‘கெதியாய்க் குடிச்சிட்டுப் போங்கோ. இப்ப கள்ளு சங்கத்திலை இருந்து சோதிக்க ஆட்களை நியமித்திருக்கினை’’ என்றபடி ஒருவன் கள்ளுப்போத்தல்களைக் கொண்டு வந்து வைத்தான்.

‘‘பனங்கள்ளடா. தேன்மாதிரி இருக்கும். வெறிக்காது குடி’’ என்றான் அவர்களுடன் வந்த மாதவன் என்ற மாணவன்.

‘‘நாங்கள் அடிக்கடி வாறனாங்கள். பபய்படாமல் குடி’’ என்றான் இன்னொருவன். சிவகுமார் குடித்தான் . உண்மையில் மாதவன் சொன்னது போலக் கள்ளு தேனாக இனித்தது.

அதன் பின் சிவகுமார் பலமுறை தனியாக வந்து குடித்தான்.

அப்போது ரெலிபோன் மணி ஒலித்தது. வித்தியா தான் அழைத்தாள். இன்று அவனது நண்பன் திவாகரன் டுபாயில் இருந்து வந்து பாட்டி வைக்கிறான். வெளிநாட்டுக் குடிவகைகளைக் குடிக்கலாம். இவள் விடமாட்டாள். எரிச்சலாக இருந்தது சிவகுமாருக்கு. கட் பண்ணினாலும் கரைச்சல் என்பதற்காக வேண்டா வெறுப்பாக; ‘‘ஹலோ’’ என்றான்.

‘‘நான் ஐந்து நாட்களாகக் காணாது தவிக்கிறேன். இன்று பகல் சாப்பாடு எமது வீட்டில் தான். வாருங்கோ. காத்திருப்பேன். மாப்பிளையும் பொம்பிளையும் வருகிறார்கள். அவர்கள் உங்களைப் பார்க்க வேண்டுமாம்’’

சிவகுமாருக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. அவன் யோசிப்பதைக் கண்டு வித்தியா கேட்டாள்; ‘‘என்ன புறோக்கிராம் இருக்கோ?’’

‘‘ஓம்.. இன்றைக்கு ஒரு முக்கியமான செமினார் இருக்கு. நாளைக்கு வாறன். மாப்பிளை பொம்பிளை வந்தவுடனேயே போய் விடுவினையா என்ன?’’

‘‘மத்தியானம் சாப்பிட வராவிட்டாலும் ஒருமுறை வந்திட்டுப் போங்கோ. உங்களை ஒருமுறை பார்க்க வேண்டும்’’ இரந்தாள் வித்தியா.

‘‘வந்தால் நீர்விடமாட்டீர். ஒவ்வொரு சாப்பாட்டையும் வைத்துக் கொண்டு கெஞ்சி விளையாடுவீர்.’’

‘‘இல்லை நான் உடனை விட்டுர்றன்.’’

‘‘சரி வாறன்’’ என்று கூறிவிட்டுக் கட் பண்ணிய சிவகுமார் திவாகரனுக்கு எடுத்துச் சொன்னான்; ‘‘வித்தியாவைச் சமாளிக்க முடியாமல் இருக்கு. நீங்கள் ஹோட்டலுக்கு போங்கோ நான் அங்கை வாறன்’’

‘‘வராமல் நிண்டுடாதை. இண்டைக்கு எனது கல்யாண நாள்’’

‘‘கட்டாயம் வருவன்’’ என்று கூறிய சிவகுமார் வித்தியாவின் வீட்டுக்குப் புறப்பட்டான்.

வித்தியாவின் தந்தையும் தாயும் ஆசிரியர்கள் அத்துடன் அவளது சகோதரர்கள் மூவர் கனடாவில் வாழ்கின்றனர். வசதியான குடும்பம் என்பதால் அவர்களது திருமணம் இருவீட்டாரின் சம்மதத்துடன் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

வித்தியாவுக்குப் பல இடங்களில் இருந்தும் திருமணம் பேசி வந்தது. அவள் சிவகுமாரைக் காதலித்ததால் பெற்றோர் அவளின் விருப்பத்திற்குத் தடை கூறவில்லை. ஆறுமாதங்களுக்கு முன்பு வித்தியாவின் மூத்த சகோதரன் கனடாவில் இருந்து வந்திருந்தான். அவன் சிவகுமாரை மதிய உணவுக்கு அழைத்தான். சிவகுமார் அங்கு சென்ற போது அவன் சொன்னான்; ‘‘நான் குடிப்பதில்லை. நீங்களும் குடிப்பதில்லை என்று வித்தியா

சொன்னாள். மிகவும் நன்று. நல்லதொரு மாப்பிளையைத் தான் வித்தியா தேர்ந்தெடுத்துள்ளாள். யாழ்ப்பாணம் தான் இலங்கையிலேயே குடிப்பவர்கள் அதிகமாக வாழும் இடம் என்று பத்திரிகையில் வாசித்தேன். ஒரு காலத்தில் கலாசாரம், பண்பாடு என்பவற்றில் மேம்பட்டிருந்த யாழ்ப்பாணம் முழுமையாகக் கெட்டுவிட்டதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. சென்ற வருடம் குடித்த குடிவகைகளை விட இந்த வருடம் மூன்று மடங்கு அதிகமாகச் குடிந்திருக்கிறார்களாம். எனது மாமா ஒருவர் பெருங்குடிகாரர். ஆனால் மிகவும் வறியவர். நான் பாவமென்று பணம் அனுப்பினால் அதைக் குடித்து முடித்துவிட்டுத் தானாம் மறுவேலை பார்ப்பார். அதனால் நான் இப்போது பணம் அனுப்புவதில்லை''

வித்தியா வாசலில் ஆவலோடு நின்றாள். அவனைக் கண்டதும் அவளது மகிழ்ச்சி முகத்தில் தெரிந்தது; ''வாருங்கோ… வாருங்கோ'' என்று சிரித்தாள்.

''ஐந்து நாட்களாக உங்களைக் காணாது எனது மனம் பெருந் துன்பப்பட்டது. இப்போது தான் ஆனந்தமடைந்திருக்கு.'' என்று கூறி அவனருகே வந்து கையைப் பிடித்தாள்.

காதலித்த புதிதில் அவளைத் தொட முடியுமா..? தொட்டுப் பார்த்தால் எப்படி இருக்கும் என்று நினைத்து ஏங்கியவன், காதல் கை கூடிய பின் அவளை அணைத்துக் கொண்டு விடிய விடியத் தூங்க வேண்டுமென்று

நினைத்தவனுக்கு இன்று அவள் கையைப் பிடித்ததும் எரிச்சலாக இருந்தது; ‘‘இன்று நன்றாகக் குடிக்க வேண்டும்’’ என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது.

‘‘செமினாரில் இருக்கும் போது அடிக்கடி போன் பண்ணி மூட்டைக் குழப்பாதையும். உமது குரலைக் கேட்டால் எனது மனம் குழம்பி விடும் பிளீஸ்’’ என்று அவளது கையைப் பிடித்தான் சிவகுமார். அவள் உருகிப் போனாள்; ‘‘சரி, இன்று உங்களின் விருப்பப்படி நடக்கிறேன். நாளை முழுவதும் என்னுடன் இருக்க வேண்டும். அலுவலகத்திற்கு லீவு போடுங்கள்’’ என்றாள் வித்தியா.

‘‘ஒன்பது மணியாகிறது. நான் போயிட்டு வரட்டா?’’

‘‘நேரமாகிவிட்தென்று வேகமாகச் செல்லாதீர்கள். என்னை ஏற்றிச் செல்லும் வேளைகளிலும் கூட வேகமாகச் செல்வீர்கள். இப்போ வீதி நிறைய வாகனங்கள் செல்கின்றன. வீதிவிபத்துக்கள் மோசமாக அதிகரித்துச் செல்வதாகப் பொலிசார் கூறுகின்றனர். நாய்கள் குறுக்கே ஓடும். வெறியில் வாகனங்களை ஓட்டுவார்கள். நேரஞ் சென்றுவிட்டதென்று வேகமாகச் செல்லாதீர்கள். மெதுவாகச் செல்லுங்கள்’’ கையை இறுக்கமாகப் பற்றினாள் வித்தியா.

சிவகுமார் ஹோட்டலுக்கு வந்த போது பத்தரை மணியாகிவிட்டது. நண்பர்களின் மோட்டார்ச் சைக்கில்கள் வெளியே நின்றன. சிவகுமார் உள்ளே சென்ற போது

மூன்று வெற்றுச் சாராயப் போத்தல்கள் மேசையில் இருந்தன.

“வாடா பெண்சாதிக்குப் பயந்தவனே…” என்றான் அரவிந்தன்.

“பெண்சாதிக்கு யாரும் பயப்படுவதில்லை. காதலிக்குத் தான் பயப்படுவினை. சிவாவின் காதலி பேரழகி. பெரும் பணக்காரி. பயப்படாமல் இருக்க முடியுமே?” என்றான் திவாகரன்.

“சிவகுமார் நன்றாகக் குடித்துவிட்டான். அவனால் எழுந்து நிற்க முடியவில்லை. நண்பர்களும் அதே நிலையில் தான் இருந்தனர். மாலைஆறுமணியாகியும் யாருக்கும் மயக்கம் தெளியவில்லை. சிவகுமார் போனை ஓவ் பண்ணி வைத்திருந்ததால் வித்தியாவின் குறுக்கீடு இருக்கவில்லை.

இரவு ஒன்பது மணிக்கு அவர்கள் எழுந்த போது ஹோட்டல் உரிமையாளர் அவர்களுக்கருகில் வந்து சொன்னார்; “வழக்கத்தை விட இன்று அதிகமாகக் குடித்துவிட்டீர்கள். கவனமாகச் செல்லுங்கள்” அவர்கள் அடிக்கடி அங்கு குடிக்க வருவதால் அங்குள்ள அனைவருக்கும் அவர்களைத் தெரியும்.

மறுநாட் காலை சிவகுமாரின் பெற்றோரும் வித்தியாவும் அவளது பெற்றோரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வந்தனர்.

“நேற்று நன்றாகக் குடித்துவிட்டு வேகமாக மோட்டார் சைக்கிலில் வந்திருக்கின்றனர். போதையால் நிதானம் தவறி வீதியோரத்தில் நின்ற லொறி மீது மோதியுள்ளனர். இவருடன் வந்த திவாகரன் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். சிவகுமாருக்கு வலதுகால் முறிந்துவிட்டது. படித்தவர்களே வீதிஒழுங்கை மீறி நடந்தால் பாமரர் என்ன செய்வார்கள்? அத்துடன் குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டுவதால் தினமும் ஆறேழு விபத்துக்கள் நடைபெறுகின்றன. எமக்குப் பெருந்தொல்லை” என்றார் டாக்டர்.

வித்தியாவுக்குத் தலை சுற்றியது. தன்னைச் சிவகுமார் ஏமாற்றிவிட்டான் என்று நினைக்க அவன் மீது அளவில்லாத வெறுப்பு உண்டானது.

சம்பந்தன் நிலை தடுமாறிப் போனார். மாதத்தில் ஓரிருமுறை கண்காணாது குடிக்கும் தனது நண்பன் அருணாசலத்தைக் குடித்துவிட்டு வீட்டுக்கு வரக்கூடாதென்று எச்சரித்தவர். இப்போ பெருங் குடிகாரன் தனது வீட்டுள் இருப்பதை நினைத்துப் பெரும் வேதனை அடைந்தார். அவரால் தன்னைச் சுதாகரிக்க முடியவில்லை. இடிந்து போய் வாட்டின் முன்னால் இருந்த வாங்கில் அமர்ந்தார். நெஞ்சு வலித்தது.

“சிவகுமார் குடிப்பதில்லை என்று நீ சொன்னதை நம்பியதால் தான் நான் இத் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டேன். இப்போ அவன் பெருங்குடிகாரனாகிவிட்டான்.

இப்படியானவர்களைத் திருத்தவே முடியாது. திருந்தமாட்டான். போதைக்கு அடிமையானவனின் மயக்கம் ஒருபோதும் தெளியாது. எனவே யோசித்துச் செய்'' என்றார் வித்தியாவின் தந்தை. வித்தியா வெகுநேரமாகியும் எதுவும் சொல்லவில்லை.

# அறிவான களவு

சிவநாதன் வழமையாக விடியற்காலை ஏழுமணிக்குக் கடைக்கு வந்துவிடுவான். அன்று பத்துமணியாகியும் அவன் வரவில்லை. சிவநேசனிடம் அவன் பத்து இலட்சம்ரூபா கடனாகப் பெற்றிருந்தான். அதற்கு மாதம் மாதம் ஐம்பதினாயிரம்ரூபா வட்டிப்பணமாகக் கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதி வட்டிப் பணத்தைத் தவறாத கொடுத்துவிடுவான். அன்று ஐந்தாம் திகதி. வேறும் மூவர் வட்டிப்பணம் பெறுவதற்காக வந்திருந்தனர். ஒருவர் இருபத்தைந்து இலட்சரூபாய் கொடுத்திருந்தார்.

பலமுறை அங்கு பொறுப்பாக இருக்கும் நடேசனை சிவநேசன்; ''சிவநாதன் எங்கே போய்விட்டார்.? எப்போது வருவார்?'' என்று கேட்டுவிட்டார்.

ஒவ்வொரு முறையும் அவன்; ''முதலாளி போகுமிடத்தை அவரது மனைவிக்கு மட்டும் தான் சொல்லிவிட்டுச் செல்வார். வியாபார விடயமாக அவர் கொழும்புக்கும் இந்தியாவுக்கும் போய் வருவது

உங்களுக்குத் தெரியும் தானே. இருங்கோ வந்து விடுவார்'' என்று சொன்னான்.

காலையில் தேநீரை மட்டும் அருந்திவிட்டு அவர் வந்திருந்தார் முதல்நாள் அவரிடம் வட்டிக்குப் பணம் பெறும் கணேசன் வந்து சொன்னது ஞாபகத்திற்கு வந்தது; ''அண்ணை, துரைரத்தினத்தின் இளையமகளுக்கு நாளைக்காலை பத்துமணிக்கு கல்யாணஎழுத்து. மாப்பிளை பகுதி தமக்குச் சீதனமாகத் தரவேண்டிய இருபத்தைந்து இலட்சரூபாவையும் எழுதும் போதே தரச் சொன்னவை. அண்ணை, மாப்பிளை பகுதி மோசமானவர்கள். முழுக்காசையும் கொடுக்காவிட்டால் எழுத்து நடைபெறமாட்டாது என்று புறோக்கர் சொன்னவனாம். இப்பவே தாருங்கோ பெறுமதியான நகைகள் கொண்டந்திருக்கிறன்''

அப்போது ரெலிபோன் மணி அடித்தது. கணேசன் தான் இரண்டு மூன்றுமுறை எடுத்திருந்தான். இப்போது துரைரத்தினம் எழுந்திருந்தார். பயந்து பயந்து சிவநேசன் தொடர்பு கொண்டார்.

''என்னய்யா இப்படிச் செய்துவிட்டீர். மாப்பிளை பகுதி எமக்குத் தெரியாதவர்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை அன்றே கொடுத்து எமது கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென நினைத்தேன். அத்துடன் கல்யாணத்தரகன் எழுந்தன்றே சகல பிரச்சினைகளையும் தீர்க்க வேணுமெண்டவன். அதை

உமக்கு நானும் கணேசனும் பலமுறை வலியுறுத்திச் சொன்னனாங்கள். இருந்தும் நீங்கள் கவலையீனமாக நடந்து எனது பெண்ணின் வாழ்க்கையைச் சீர்குலைக்க முற்பட்டுவிட்டீர்கள். உமக்கு என்னில் கோபம் இருக்கென்று எனக்குத் தெரியும். ஆனால் கணேசன் தான் நீங்கள் நேர்மையானவர் என்றும், சொன்ன சொல்லுத் தவறமாட்டீர்களென்றும் சொன்னதாலை தான் நான் நம்பி உம்மிடம் வந்தேன். நீர் உமது குணத்தைக் காட்டிவிட்டீர். எல்லாவற்றையும் மேலை இருக்கிறவன் பார்த்துக் கொள்வான்'' என்று கூறிவிட்டுத் தொடர்பைக் துண்டித்தார் துரைரத்தினம்.

சிவநேசனுக்குத் தாங்க முடியாத வேதனை உண்டானது; ''தன்னிடம் இல்லை என்று சொன்னாலும் கணேசனும் துரைரத்தினமும் நம்பமாட்டார்கள் என்பதற்காகவே விடிய எட்டுமணிக்குத் தருகிறேன்'' என்றார். அது இவ்வளவு விளைவைத் தருமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. துரைரத்தினம் அவரின் மனைவியின் இனத்தவன். ஐந்து வருடங்களுக்கு முன்பு துரைரத்தினத்தின் மகனைச் சிவநேசனின் மகள் விரும்பினாள். அவன் வெளிநாட்டில் இருந்தான். அதனால் துரைரத்தினம் தனது மகனுக்குச் சிவநேசனின் மகளைத் திருமணம் செய்து கொடுக்க மறுத்துவிட்டார். அப்போது சிவநேசன் மிகவும் வறுமையான நிலையில் இருந்தார். அதன் பின் அவரது மூன்று மகன்மாரும் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டனர். பின் மகளுக்கும் வெளிநாட்டில் திருமணம்

பேசி அவளையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டார். அதன் பின் துரைரத்தினத்தின் உறவைச் சிவநேசன் துண்டித்துவிட்டார். இரண்டு மாதங்களுக்கு முன்பு துரைரத்தினத்தின் தாயார் தொண்ணூறு வயதில் காலமான போதும் கூடச் சிவநேசன் செல்லவில்லை.

பிள்ளைகளெல்லோரும் வெளிநாடுகளுக்குச் சென்றதால் தான் விவசாயம் செய்த பத்துப்பரப்பு நிலத்தை ஐம்பது இலட்சரூபாவிற்கு விற்றுவிட்டு அதில் பத்து இலட்ச ரூபாவை சிவநாதனுக்குக் கொடுத்தார். சிவநாதன் ஒருபோதும் தவணை தப்பிப் பணம் கொடுத்தது கிடையாது. அதனால் தான் காலையில் அவனிடம் வாங்கிக் கொடுக்கலாமென நினைத்து அப்படிச் சொன்னார்.

அப்போது அங்கே கணேசன் வந்தான்; ‘‘நீ என்னண்ணை செய்தனீ. மாப்பிளை பகுதி வரும்வரை துரைரத்தினமும் பெண்சாதியம் என்ரை வீட்டை தான் இருந்தவை. துரைரத்தினத்திற்குக் கொலை வெறி. அதை என்னிலை தான் காட்டினார்; ‘‘நீயும் அவனும் சேர்ந்து திட்டமிட்டத் தான் இப்படிச் செய்துள்ளீர்கள். அவனுக்குத் தன்ரை மகளை எனது மகன் செய்யவில்லை என்று கோபம். அதுக்கு நானென்ன செய்யிறது. அவனுக்கு லண்டனிலை காட் கொடுக்கேல்லை. பிடிச்சு இலங்கைக்கு அனுப்ப வைத்திருந்தவங்கள். பிறகு இங்கு நடைபெற்ற மோசமான சம்பவங்களாலை விட்டுவிட்டு இலங்கையிலை நிலைமை சீரடைய அங்கு அனுப்புவோமே தவிரக் காட் தரமாட்டம் என்றவங்களாம். அவள் ஏற்கனவே திருமணமானவள். புரிசன்

டைவோஸ் எடுத்திட்டான். ஒரு பிள்ளையும் இருக்கு. அவளைத் தான் அங்கு தங்குவதற்காக அவன் செய்தவன். ஒரு பிள்ளையும் இருக்கு. இந்த நிலைமையிலை என்னைக் கோபித்து என்ன பயன்? இப்ப பழிவாங்கிப் போட்டான். அதுக்கு நீயும் உடந்தை என்று என்னோடை சண்டைக்கு வந்திட்டார். நான் என்ன செய்ய முடியும். அந்தாளின்ரை தவறான எண்ணத்தைப் போக்குவதற்காக எனது மனைவியின் நகை முழுவதையும் கொண்டு போய் வங்கியிலை அடைவு வைச்சிட்டுப் பணம் வாங்கிவந்து கொடுத்தனான். எழுத்து நல்லபடியாக முடிந்துவிட்டது'' பெருமூச்சுவிட்டான் கணேசன்.

''ஒரு மாதிரிச் சமாளித்துவிட்டாய். நான் காசு தாறன் நகைகளை எடு'' என்றார் சிவநேசன்.

''காலமை குடித்த தேநீருடன் இருக்கிறன். பசிக்குது. போகமுன்னம் ஒருக்கால் கேட்டுப் பார்ப்பம்'' என்று கூறிய சிவநேசன் மீண்டும் அக் கடைக்குப் பொறுப்பானவனிடம் சென்றார்; ''ஐயா, முதலாளி கொழும்புக்கு அல்லது இந்தியாவுக்குச் சென்றால் நாலைந்து நாட்களுக்கு வரமாட்டார் என்று சொன்னனான் தானே. உங்களுக்கு எப்பென்றாலும் வட்டிக்காசை நாள் தவறித் தந்தவரா? இல்லையே. இன்று அவர் வரவில்லை. எங்கோ வியாபார விடயமாகச் சென்றுவிட்டார். நாளைக்கு வாருங்கோ. அவர் ஏமாற்றமாட்டார் பயமில்லாமல் போங்கோ.''

சிவநேசன் எதுவும் கூறவில்லை. அவன் கூறவது நியாயமாக இருந்தது. பணவிடயத்தில் இதுவரை சிவநாதன் யாரையும் ஏமாற்றியது கிடையாது. குறித்த தினத்தில் வட்டிப்பணத்தைக் கொடுப்பான். குறித்த தினத்தில் தான் கொடுக்க வேண்டிய பணத்தையும் கொடுத்துவிடுவான். பணம் பெறவேண்டியவர்கள் அன்று வராவிட்டால் வீடுதேடிச் சென்று கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்துவிடுவான். இதனால் அவனுக்கு ஊர் முழுவதிலும் நல்ல பெயர் இருந்தது.

''உங்களிடம் காசு இல்லையென்றால் இல்லையென்று சொல்லியிருக்கலாம். அதை விட்டுவிட்டு தரவேண்டிய காசை வாங்கித் தருவேன் என்று என்னிடம் சொல்லியிருந்தால் நான் வேறு யாரிடமாவது கேட்டு வாங்கியிருப்பன். மடை வேலை பார்த்திட்டாய். உன்னாலை எனக்கும் கெட்ட பெயர் வந்துவிட்டது'' என்றான் கணேசன்.

''அவனோடை எனக்கு நெடுகப்பகை. அதை வளர்க்கக் கூடாதென்பதற்காகத் தான் நான் காசு தருவதாக ஒப்புக் கொண்டனான். சிவநாதன் ஒருபோதும் தவணை தப்புவதில்லை. போனமாதம் நான் போகவில்லை. அவன் வீட்டை கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்துவிட்டுப் போனவன். இன்றைக்கு எனக்குத் தான் கெடுகாலம். எல்லாம் விதிப்பயன்'' என்றார் சிவநேசன்.

வாரம் ஒன்று கழிந்தது. சிவநேசன், சிவநாதனின் வீட்டுக்குச் சென்றார். அது பூட்டியிருந்தது. வீட்டில் யாரும்

இல்லை. அடுத்த வீட்டில் வசிக்கும் பரமானந்தன் அங்கு வருபவர்களுடன் கதைத்துக் கொண்டு நின்றான். அங்கு ஏராளமானவர்கள் நின்றனர்.

“நேற்று இரவு எட்டுமணிக்கு ஒரு கைஏஸ் வான் வந்து நின்றது. நான் வெளியே வந்து பார்த்த போது சிவநாதனும் அவனது குடும்பத்தினரும் அந்த வானில் இருந்தனர்; “கொழும்பில் ஒரு திருமணம் நாளை நடைபெறவுள்ளது. அதற்குச் செல்கிறோம். நாளையிண்டைக்கு வந்து விடுவோம் என்று சிவநாதன் சொன்னவன்” என்றார் பரமானந்தன்.

சிவநேசனுக்குச் சந்தேகமாக இருந்தது. பட்டணத்தில் உள்ள கடைக்குக் கணேசனையும் அழைத்துக் கொண்டு சென்றார். கடை பூட்டப்பட்டிருந்தது. வாசலில் பலர் கூடிநின்றனர்.

“இவன் எங்களைச் சரியாய் ஏமாற்றிப் போட்டான். நல்லவன் மாதிரி நடித்துப் பலரிடம் பணம் பெற்றான். பெற்ற பணத்திற்கு உரிய வட்டியை உரிய தினத்தில் கொடுத்தமையால் பலருக்கு அவன் மீது நம்பிக்கை உண்டானது. அதனால் பல பணக்காரர்கள் அவன் கேளாமலே கொண்டு சென்று தமது பணத்தைக் கொடுத்தனர். அவன் எல்லாரிடமும் பணம் வாங்கிக் கொண்டு தலைமறைவாகிவிட்டான்.” என்றார் அங்கிருந்த ஒரு பெரியவர்.

சிவநாதனின் கடைக்கு முன்பாக நின்ற நூற்றுக்கும் மேற்பட்டோர் தாம் ஏமாந்ததை உணர்ந்து வேதனையுடன் வீடு திரும்பினர்.

சிவநேசனும் கணேசனும் வீட்டுக்கு வந்த போது நாகராசாவும் புண்ணியமூர்த்தியும் அங்கிருந்தனர்.

“நீ சொன்னதை நம்பித் தான் நான் ஐம்பது இலட்சரூபாவைக் கொடுத்தேன்..” என்று புண்ணியமூர்த்தி கூறும் போது சிவநேசன் குறுக்கிட்டார்; “நானென்ன சொன்னனான்… நானென்ன சொன்னனான்?”

“ஏனப்பா கோபப்படுறாய்? என்னட்டை கொஞ்சக் காசிருக்கு சிவநாதனுக்குக் கொடுக்கலாமோ என்று கேட்டனான். நீ அவன் நம்பிக்கையான ஆள் கொடுக்கலாம் என்றாய்”

“ஓ அப்பிடிச் சொன்னனான் தான். அவன் ஊர் முழுக்கக் கடன் வாங்கியிருக்கிறான். அவர்களுக்குரிய வட்டியை உரிய நேரத்தில் கொடுக்கிறான் என்றனான். கொடுத்தவன் தானே…”

பெருமூச்சு விட்டார் புண்ணியமூர்த்தி; “உன்னைப் போலத் தான் நான் விசாரித்த அத்தனை பேரும் சொன்னவை. என்ரை மனிசிக்கு வைப்பாஸ் ஒப்பிரேசன் செய்ய ஐந்து இலட்சரூபாய் வேண்டும். நான் கிடந்த காசு முழுவதையும் அவனிட்டைக் கொடுத்தனான். ஒருமாதம்

கழிய மூன்று இலட்சரூபாய் வட்டிப்பணமாகத் தந்தவன். நான் இரண்டு இலட்சம்ரூபா போட்டு ஒப்பரேசனைச் செய்தனான். அதைக் கேள்விப்பட்ட சிவநாதன் அடுத்த மாதவட்டிக் காசையும் உடனே கொண்டு வந்து தந்தவன். இதை நான் எனது மனைவியின் சகோதரர்களுக்குச் சொல்ல அவர்கள் ஐந்தைந்து இலட்சரூபா கொடுத்தவை. எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு போய்விட்டான்.''

''எனக்குச் சரியான கவலையாக இருக்கு வா கணேஸ் பாருக்குப் போவம். நன்றாகக் குடித்தால் தான் என்ரை கவலை தீரும்'' என்றார் சிவநேசன்.

''ஒரு வருடம் கழிந்தது. சிவநாதனைப் பற்றிய சரியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. சிலர்; ''அவன் கொழும்பில் இருக்கிறான்'' என்றனர். சிலர்; ''அவன் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டான்'' என்றனர். வேறு சிலர்; ''அவன் இறந்துவிட்டான்'' என்றனர்.

கடன் கொடுத்தவர்கள் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர்.

சிவநேசன் தனது பிள்ளைகளுக்கு நடந்த சம்பவங்களைக் கூறி வெளிநாடுகளில் அவனைத் தேடும்படி கூறினார்.

அவன் இந்தியாவில் உள்ள ஐதராபாத் மாநிலத்தில் தற்போது பெரிய தங்கநகைக்கடை வைத்துக்

கோடீஸ்வரனாக வாழ்கிறான். அவன் தனது பெயரை மாணிக்கராசாவென மாற்றிப் பதிவு செய்துள்ளமையால் அவனைப் பொலீசாரால் கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை.